நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/1491/2017

தீர்மான எண்.432/2019 **நாள்:02-08-2019**

நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் 12, வார்டு 157 - மணப்பாக்கம் கிராமம், ரிவர்வியூ காலனி - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான புல எண். 115/2A, 116/2Aல் உள்ள திறந்தவெளி நிலத்தில் 18 மீ X 45 மீ நிலத்தை பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்கு சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் கோரியது - சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு அனுமதி.

அரசு துணை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அவர்களின் 28.03.2017 நாளிட்ட கடிதத்தில், முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அவர்களால் 03.04.2017 அன்று 3.00 மணிக்கு நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டத்திற்கென தேவைப்படும் நிலங்களை தெரிவு செய்து வழங்குமாறும், வழங்க இயலாத நிலங்களுக்கு பதிலாக மாற்று நிலங்களை கூட்டுப்புலத்தணிக்கை செய்து சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு உடன் வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) (பொ) அவர்களால் 04.04.2017 அன்று 3.00 மணிக்கு நடைபெற்ற தொடர் கூட்டத்தில், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய திட்டப்பணிகளுக்கு நிலங்களை ஒப்படைப்பது தொடர்பாக கூட்டுப்புலத்தணிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி நிலத்தை நிலம் மற்றும் உடைமைத்துறை தனி வட்டாட்சியர்கள் மற்றும் சார் ஆய்வாளர்கள், சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்கள் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அலுவலர்கள் ஆகியோரால் 06.04.2017 அன்று கூட்டுப்புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தனி வட்டாட்சியர்/நிமஉது அவர்களின் 07.04.2017 நாளிட்ட புலத்தணிக்கை அறிக்கையில், காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம், மணப்பாக்கம் கிராமம், புல எண். 115/2A, 116/2A பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவாக உள்ளது. இந்த புலத்தில் பூங்கா அமைக்கப்பட்டுள்ளதால் வேறு நிலத்தை சென்னை பெருநகர குடிநீர் வடிகால் வாரியத்தினரை தேர்வு செய்ய கோரலாம் என அறிக்கை அளித்துள்ளார். மேற்படி இடத்தினை சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீரகற்று வாரியத்திற்கு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 30.05.2017 நாளிட்ட நிர்வாக இயக்குநர், சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீரகற்று வாரியம் அவர்களின் கடிதம் வரப்பெற்றுள்ளது.

நிர்வாக இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், அவர்களின் 30.05.2017 நாளிட்ட நேர்முக கடிதத்தில், மண்டலம்-12, வார்டு-157, மணப்பாக்கம் கிராமம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான புல எண். 115/2A, 116/2Aல் உள்ள திறந்தவெளி நிலத்தில் 18 மீ x 20 மீ நிலத்தை பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ள சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர்-12 அவர்களின் 05.07.2017 நாளிட்ட குறிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, வார்டு-157 மணப்பாக்கத்தில் உள்ள ரிவர்வியூ காலனி சாலை மற்றும் ஆற்காடு சாலை சந்திப்பு பகுதியில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் பாதாள சாக்கடை திட்டப் பணிக்கு இடம் தேவையென கடந்த 18.02.2014ம் நாளிட்ட கடிதத்தில் CMWSSB பகுதி பொறியாளர் கோரியுள்ளார். தற்போது இவ்விடத்தில் ***AMRUT* திட்டத்தின் கீழ் ரூ. 54.72 இலட்சங்கள் மதிப்பீட்டில் சிறுவர் விளையாட்டு திடல் மற்றும் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது**. இருப்பினும் இவ்விடத்தின் ஒரு பகுதியான 18 மீ X 20 மீ அளவுள்ள 360 சதுர மீட்டர் இடத்தினை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு வழங்க பெருநகர சென்னை மாநகராட்சி, நிலம் மற்றும் உடைமைத்துறை மூலம் உரிய வழிமுறையின்படி நிலமாற்றம் செய்ய பரிசீலிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் 04.01.2001 மற்றும் 10.08.2001 நாளிட்ட கடிதங்களில், "சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஒவ்வொரு திட்ட அனுமதி வழங்கும் இனங்களில் பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் அமைக்க திறந்தவெளி நிலங்களை, உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைக்கின்றனர். மேலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து பெறப்பட்ட கடிதங்களில் திறந்தவெளி பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களில் கட்டுமானப்பணி ஏதும் மேற்கொள்ளக்கூடாது எனவும், அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிலங்களை விற்பனை செய்யவோ, குத்தகைக்கு விடவோ, வாடகைக்கு விடவோ அனுமதிக்கக் கூடாது எனவும், எந்த காரணத்திற்காக திறந்தவெளி நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அதற்காகவே பயன்படுத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது".

The Parks, Playfields and Open spaces (Preservation and Regulation) Act No. 26 of 1959, Sub section (c) of Section 2 states as follows, "Open space" means any land whether enclosed or not, belonging to the Government or any local authority, on which there are no buildings or of which not more than one-twentieth part is covered with buildings, and the whole or the remainder of which is used for purposes of recreation, air or light;

Also Section 6 as follows, No park, play-field or open space specified in the list published under section 4 or 5 shall, ***except with the previous sanction of the Government****, be used for any purpose other than the purpose or purposes for which it was used on the date of the coming into force of this Act under sub-section (3) of section I or on the date with effect from which this Act is extended to the local area concerned under sub-section (4) of section I, as the case may be* என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர் செயலாளர் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், அவர்களின் அரசுக்கு அனுப்பியுள்ள 12.05.2017 நாளிட்ட கடிதத்தில், *sub-section 34 of section (2) defined the term, Tamil Nadu Town and Country Planning Act, 1971 "Public Open Space means any land whether enclosed or not belonging to the Central or any State Government or any local authority or anybody corporate, owned or controlled by the Central or any State Government, on which there is no building or of which not more that one-twentieth part is covered with buildings, and the whole or the remainder of which is used for purpose of recreation, air, or light". As per the above provision 5% of extent of OSR can alone be used for construction / development purpose* என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 02.08.2017 நாளிட்ட கடிதத்தில், மேற்படி திட்டத்தை செயல்படுத்த அப்பகுதியில் வேறு அரசுக்கு சொந்தமான காலி நிலங்கள் ஏதும் இல்லாததாலும், அப்பகுதி மக்களின் அத்தியாவசிய தேவையான பாதாள சாக்கடைக்கான திட்டமாக இருப்பதால், மண்டலம்-12, வார்டு-157, மணப்பாக்கம் கிராமம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான புல எண். 115/2A, 116/2Aல் உள்ள நிலம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் AMRUT திட்டத்தின்கீழ் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் 03.04.2017 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் இவ்விடத்தின் ஒரு பகுதியை சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு வழங்க பரிசீலிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களால் நடத்தப்பட்ட கலந்தாலோசனை கூட்டத்தில் பாதாள சாக்கடை திட்டத்தினை நிறைவேற்ற வேறு காலியிடம் இல்லாததால் சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் கோரிக்கையின் அடிப்படையில் குறைந்தளவு இடமான 18 மீ X 20 மீ வழங்க பரிசீலிக்கலாம் என மண்டல அலுவலரால் தெரிவிக்கப்பட்டது. எனவே, திறந்தவெளி பயன்பாட்டில் உள்ள இடத்தின் ஒரு பகுதியை சென்னை குடிநீர் வடிகால் வாரிய பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்கு வழங்குவதற்கு

ஏதுவாக திறந்த வெளி நில வகைப்பட்டிலிருந்து நீக்கி உரிய அனுமதி வழங்குமாறு அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசு முதன்மைச்செயலாளர்/நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 26.09.2017 நாளிட்ட கடிதத்தில், As per the provisions of Sub-section-34 of Section-2 of Tamil Nadu Town and Country Planning Act, 1972, 5% of OSR Land can be used for construction / development purpose என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 27.10.2017 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-12, வார்டு-157, மணப்பாக்கம் கிராமம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான புல எண். 115/2A, 116/2Aல் உள்ள திறந்தவெளி நிலத்தில் அரசு தெரிவித்துள்ள சென்னை பெருநகர வளர்ச்சி குழும விதிகளின்படி, 5 சதவீத நிலத்தில் மட்டும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொள்ளுமாறு மேலாண்மை இயக்குநர், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், மேற்படி வழங்கப்பட்ட நிலத்தினை எல்லை வரையறை நிர்ணயம் செய்வது சம்பந்தமாக தனி வட்டாட்சியர்/நிமஉது அவர்களால் மேற்கொள்ளப்பட்ட 13.05.2019 நாளிட்ட கூட்டுப்புலத்தணிக்கையில், மேற்படி புலம் திறந்தவெளி நிலம் வகைப்பாடு கொண்டது. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மூலம் 1715 ச.மீ நிலம் தானமாக வரப்பெற்றதாகும் (MIC Comprehensive Medical Service India Ltd). தற்போது பூங்கா அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்புலத்தில் ஏற்கனவே அவசியம் கருதி 5 சதவீத நிலம் மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இப்பரப்பு Pumping Station திட்டத்திற்கு போதுமானது இல்லை என்றும், ஏற்கெனவே சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீரகற்று வாரியத்தால் கோரப்பட்ட 18 x 45 = 810 ச.மீ வழங்க கோரப்பட்டது. தற்போதுள்ள பூங்காவில் AMRUT திட்டம் மூலம் பல வசதிகள் மேற்கொள்ளப்பட்டு, மரங்கள், இளைப்பாறும் பகுதி, குழந்தைகள் விளையாட்டு பகுதி, நடை மேற்கொள்ள வசதி என பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் அரசு தெரிவித்துள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும விதிகளின்படி, திறந்தவெளி நிலங்களில் 5 சதவீதம் மட்டுமே கட்டுமானப் பணிகள் / மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள வழிவகை உள்ளது. எனவே, கூடுதலாக கோரப்படும் (450 ச.மீ) பரப்பை வழங்க சாத்தியக்கூறு இல்லை. இதனால் பூங்காவின் பாதிப்பரப்பு வழங்கப்பட வேண்டும் என்பதால், ஏற்கனவே மண்டல அலுவலர்-12 அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், அவசர அவசியம் கருதியும் 18 x 20 ச.மீ பரப்பை வழங்கலாம் அல்லது சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீரகற்று வாரியம் வேறு தகுதியான நிலம் தேர்வு செய்துகொள்ளுமாறு தெரிவிக்கலாம் என தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மண்டலம்-12, வார்டு-157, மணப்பாக்கம் கிராமம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான புல எண். 115/2A, 116/2Aல் உள்ள நிலம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் AMRUT திட்டத்தின்கீழ் பூங்கா அமைக்கப்பட்டு, பல வசதிகள் மேற்கொள்ளப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. அரசு தெரிவித்துள்ள சென்னை பெருநகர வளர்ச்சி குழும விதிகளின்படி திறந்தவெளி நிலத்தில் 5 சதவீதம் மட்டுமே கட்டுமான பணிகள் / மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள வழிவகை உள்ளது என்ற அடிப்படையில் ஏற்கனவே மொத்த விஸ்தீரணத்தில் 5 சதவீத நிலம் வழங்கப்பட்டுள்ள நிலையில், கூடுதலாக கோரப்படும் 18 x 45 ச.மீ (450 ச-மீ) நிலத்தினை வழங்க இயலாத நிலை உள்ளது என தெரிவித்துள்ளார்

இணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களின் 15.07.2019 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-12, வார்டு-157, மணப்பாக்கம் கிராமம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான புல எண். 115/2A, 116/2Aல் உள்ள நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் AMRUT திட்டத்தின்கீழ் பூங்கா அமைக்கப்பட்டு, பல வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும், அரசு தெரிவித்துள்ள விதிகளின் அடிப்படையிலும், கூடுதலாக கோரப்படும் 18 x 45 ச.மீ (450 ச-மீ) நிலத்தினை வழங்க இயலாத நிலை உள்ளது எனவும், வேறு தகுதியான நிலத்தினை தேர்வு

செய்துகொள்ளுமாறு மேலாண்மை இயக்குநர், சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீரகற்று வாரியம் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

மேலாண்மை இயக்குநர், சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீரகற்று வாரியம் அவர்களின் 29.07.2019 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம் மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் ஆகியோரால் மேற்படி பகுதி முழுவதிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், அப்பகுதியை சுற்றிலும் பாதாள சாக்கடை உந்து நிலையம் அமைக்க தகுதியான வேறு இடம் இல்லாததால், இத்திட்டத்தினை செயல்படுத்த மண்டல அலுவலர்-12 அவர்கள் பரிந்துரைத்துள்ளபடி மேற்படி புலத்தில் 18 x 20 மீ (360 மீ) நிலத்தினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இந்நேர்வில், மேற்படி திட்டத்தை செயல்படுத்த அப்பகுதியில் வேறு அரசுக்கு சொந்தமான காலி நிலங்கள் ஏதும் இல்லாததாலும், அப்பகுதி மக்களின் பாதாள சாக்கடைக்கான அத்தியாவசியமான திட்டமாக இருப்பதாலும், அவசர அவசியம் கருதி மண்டலம்-12, வார்டு-157, மணப்பாக்கம் கிராமம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான புல எண். 115/2A, 116/2Aல் உள்ள மொத்த விஸ்தீரணம் 1715 ச. மீ திறந்தவெளி நிலத்தில் 18 x 20 மீ (360 மீ) நிலத்தினில் பாதாள சாக்கடை உந்து நிலையம் அமைக்க சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

க.து.ந.க.எண்.பி1/922/2019

தீர்மான எண்.433/2019 **நாள்:02-08-2019**

கட்டடத் துறை - மதிப்பீடு 2018- 2019 - மண்டலம்-1, வார்டு-11, திருவொற்றியூர் நகர்புற சுகாதார மருத்துவமனையில் (100 Beds) Fire Protection Systems அமைத்து ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிக்காக ரூ.68,30,000/-க்கு 2018-2019 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி

1	பணியின் பெயர்	மண்டலம்-1, வார்டு-11, திருவொற்றியூர் நகர்புற சுகாதார மருத்துவமனையில் (100 Beds) Fire Protection Systems அமைத்து ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணி.
2	பரிந்துரை செய்தவரின் விவரம்	துணை ஆணையர் (சுகாதாரம்)
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	சுகாதாரத்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2018-2019 ஆம் ஆண்டின் விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 68,30,000.00
	(அ) பணி செலவு	ரூ 56,27,924.90
	(ஆ) எதிர்பாரா செலவு	ரூ. 1,32,769.37
	(இ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 56,279.25
	(ஈ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ 10,13,026.48
	மொத்தம்	ரூ. **68,30,000.00**
6	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
7	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதிய பணி
8	நிதியின் தன்மை / ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி / கணக்கு குறியீட்டு எண்.	அரசு மான்யம் (NUHM)
9	இக்கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ. 68,30,000.00

மண்டலம்-1, வார்டு-11, திருவொற்றியூர் நகர்புற சுகாதார மருத்துவமனையில் (100 Beds) Fire Protection Systems அமைத்து ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிக்காக ரூ. 68,30,000/-க்கு (ரூபாய் அறுபத்தெட்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) 2018-2019 ஆம் ஆண்டின் விலையின்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி கோரிய ஆணையரது 01.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"திட்ட மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது".

******

ப.து.ந.க.எண்.D1/SD/WDCN14/00138/2019

தீர்மான எண்.434/2019 **நாள்:02-08-2019**

தானப்பத்திரம்

திரு. B. Vishnu Sashankar (உரிமையாளர் மற்றும் பவர் ஏஜென்ட்) அவர்கள் பிளாட் எண்.56, 3வது குறுக்கு தெரு, கிருஷ்ணா நகர், ஜல்லடியான்பேட்டை, சென்னை – 600100, சர்வே எண். 178/1, 178/2, 193/2A & 193/4 ஜல்லடியான்பேட்டை கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN14/00138/2019, நாள்: 15.03.2019ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள் 21.08.1984ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் திரு. B. Vishnu Sashankar (உரிமையாளர் மற்றும் பவர் ஏஜென்ட்) மனைப்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) திரு. B. Vishnu Sashankar (உரிமையாளர் மற்றும் பவர் ஏஜென்ட்) மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 5780.62 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 982.17 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. சாலைகள் அனைத்தும் 7.2மீ அகலம் உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக ஜல்லடியான்பேட்டை கிருஷ்ணா நகர் 3வது குறுக்கு தெரு அமைந்துள்ளது.

(ஆ) திரு. B. Vishnu Sashankar (உரிமையாளர் மற்றும் பவர் ஏஜென்ட்) அவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனையின் உரிமையாளர்கள் திரு. K.Kalyanasundaram, திரு. A.Sreedharan மற்றும் திருமதி. Geetha Sridharan ஆகியவர்களிடமிருந்து, பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரப் பத்திரம் பெற்று விண்ணப்பம் சமர்ப்பிக்க உரிமையுடையவராக உள்ளார். மேலும் மனையின் ஒரு பகுதியை திரு.J.Yesudoss, அவர்களிடமிருந்து விற்பனை பத்திரம் மூலம் பெற்றதால் விண்ணப்பதாரர் உரிமையாளர் என்கிற அடிப்படையிலும் மற்றும் பொது அதிகார முகவர் என்கிற முறையிலும் விண்ணப்பம் சமர்ப்பிக்க உரிமையுடையவராக உள்ளார். மனை உரிமையாளர்கள் மனைக்கான பட்டாவினை, வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக ஜல்லடியான்பேட்டை கிருஷ்ணா நகர் 3வது குறுக்கு தெரு அமைந்துள்ளது. அனைத்து மனைகளும் 72 ச.மீ பரப்பளவிற்கு குறையாமல் உள்ளது.

(ஈ) மனைப்பிரிவின் பரப்பளவு 3000 ச.மீ க்கு மேல் மற்றும் 10,000 ச.மீக்கு கீழே இருப்பின் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீடு நிலம் ஒப்படைப்பு செய்யவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம் என்று விதிகள் உள்ளது. திரு. B. Vishnu Sashankar (உரிமையாளர் மற்றும் பவர் ஏஜென்ட்) அவர்கள் இவ்விண்ணப்பத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் (பூங்கா) 184.55 ச.மீ நிலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய தானப்பத்திரம் அளித்துள்ளார்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1%பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO-விற்கு மற்றும்

0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். திரு. B. Vishnu Sashankar (உரிமையாளர் மற்றும் பவர் ஏஜென்ட்) அவர்கள் அதற்கேற்றவாறு 24.00 ச.மீ பரப்பளவு நிலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். அவ்வாறே 24.00 ச.மீ பரப்பளவு நிலம் தமிழக அரசின் TANGEDCO விற்கும் ஒப்படைக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அமைப்பதற்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணமாக விண்ணப்பதாரரிடம் இருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அபிவிருத்தி செய்ய தேவையான தொகை ரூ.12,33,000/- வசூலிக்கப்பட வேண்டும்.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் திரு. B. Vishnu Sashankar (உரிமையாளர் மற்றும் பவர் ஏஜென்ட்) அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதப்படுவதாலும், திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் (பூங்கா) 184.55 ச.மீ நிலம், சாலைக்கென ஒதுக்கப்பட்ட 982.17 ச.மீ பரப்பளவு நிலமும், பொது பயன்பாட்டிற்காக 24.00 ச.மீ பரப்பளவு நிலத்தையும் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருத்தபடுகிறது.

எனவே,

(1) பிளாட் எண்.56, 3வது குறுக்கு தெரு, கிருஷ்ணா நகர், ஜல்லடியான்பேட்டை, சென்னை -600100, சர்வே எண்.178/1, 178/2, 193/2A & 193/4, ஜல்லடியான்பேட்டை கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 982.17 ச.மீ நிலமும் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் 184.55 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்காக 24.00 சதுர மீட்டர் நிலமும் உரிமையாளர் திரு. B. Vishnu Sashankar (உரிமையாளர் மற்றும் பவர் ஏஜென்ட்) யிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.12,33,000/- (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து முப்பத்தி மூன்றாயிரம் மட்டும்) (உரிமையாளர் மற்றும் பவர் ஏஜென்ட்) யிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 31.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ப.து.ந.க.எண்.டி1/064/2019

தீர்மான எண்.435/2019 **நாள்:02-08-2019**

தானப்பத்திரம்

மண்டலம்-10, கோட்டம்-139ல் திரு. N. Jaffar, அவர்கள் கதவு எண்.46, மேற்கு ஜோன்ஸ் ரோடு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை-600015 T.S.No.52/2, பிளாக் எண்.84, கோடம்பாக்கம் கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ல் PPA/WDCN10/01869/2019 நாள்.21.03.2019ன்படி விண்ணப்பித்துள்ளார். அவர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக மேற்கு ஜோன்ஸ் ரோடு, அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி மேற்கு ஜோன்ஸ் ரோடு 18.0 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 26.51ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு. N. Jaffar,, அவர்கள் கதவு எண்.46, மேற்கு ஜோன்ஸ் ரோடு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை-600015, T.S.No.52/2, பிளாக் எண்.84, கோடம்பாக்கம் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய 26.51ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.47,200/-ஐ (ரூபாய் நாற்பத்தி ஏழாயித்து இருநூறு மட்டும்) மனை உரிமையாளர் திரு. N. Jaffar, அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 31.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ப.து.ந.க.எண்.டி1/068/2019

தீர்மான எண்.436/2019 **நாள்:02-08-2019**

தானப்பத்திரம்

மண்டலம்-6, கோட்டம்-69ல் திரு. M. Gokulan, அவர்கள் புதிய கதவு எண்.179/2 பழைய கதவு எண். 66/3 மாதவரம் நெடுஞ்சாலை வடக்கு, சிறுவள்ளூர், சென்னை-600011 T.S.No.85/2. பிளாக் எண்.8 செம்பியம் கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06ல் PPA/WDCN06/03468/2019 நாள். 30.05.2019ன்படி விண்ணப்பித்துள்ளார். அவர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக மாதவரம் நெடுஞ்சாலை வடக்கு, அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி மாதவரம் நெடுஞ்சாலை வடக்கு 24.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 27.92ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு. M. Gokulan, அவர்கள் புதிய கதவு எண்.179/2 பழைய கதவு எண். 66/3 மாதவரம் நெடுஞ்சாலை வடக்கு, சிறுவள்ளூர், சென்னை-600011 T.S.No.85/2. பிளாக் எண்.8, செம்பியம் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய 27.92 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.49,700/-ஐ (ரூபாய் நாற்பத்தி ஒன்பதாயித்து எழுநூறு மட்டும்) மனை உரிமையாளர் திரு.M.Gokulan, அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 31.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ப.து.ந.க.எண்.டி1/070/2019

தீர்மான எண்.437/2019 **நாள்:02-08-2019**

தானப்பத்திரம்

மண்டலம்-8, கோட்டம்-103ல் திரு. A. Riyaz Ahamed மற்றும் திரு. A. Imran Aslam, அவர்களின் (பொது அதிகார முகவர்) திரு. M. Abdulla, அவர்கள் புதிய கதவு எண்.173, பழைய கதவு எண். 72, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, புரசைவாக்கம், சென்னை - 600084 R.S.No.122/1, பிளாக் எண்.5, புரசைவாக்கம் கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-09ல் PPA/WDCN08/03103/2019 நாள்.16.05.2019ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக புரசைவாக்கம் நெடுஞ்சாலை, அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி புரசைவாக்கம் நெடுஞ்சாலை 24.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 45.15 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு. A. Riyaz Ahamed மற்றும் திரு. A. Imran Aslam, அவர்களின் (பொது அதிகார முகவர்) திரு. M. Abdulla, அவர்கள் புதிய கதவு எண்.173, பழைய கதவு எண். 72, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, புரசைவாக்கம், சென்னை - 600084, R.S.No.122/1, பிளாக் எண்.5, புரசைவாக்கம் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய 45.15ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.72,500/- ஐ (ரூபாய் எழுபத்தி இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) மனை உரிமையாளர் திரு. A. Riyaz Ahamed மற்றும் திரு. A. Imran Aslam, அவர்களின் (பொது அதிகார முகவர்) திரு. M. Abdulla அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 31.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ம.அ.3.ந.க.எண்.அ4/4126/2019

தீர்மான எண்.438/2019 **நாள்:02-08-2019**

மண்டலம்-3 மாதவரம் - பகுதி - 6, 7 மற்றும் - 8 - கோட்டம்-22 முதல் 33 வரை மாநகராட்சி பள்ளிகளில் துப்புரவு பணி மற்றும் கழிப்பறை தூய்மை பணி ஒப்பம் கோரி பணிகள் மேற்கொள்ளப்பட்டது தற்போது தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணிப்புரிந்து வரும் தற்காலிக பணியாளர்களை 03.06.2019 முதல் 30.04.2020 வரை பணியில் அமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3 (மாதவரம்) எல்லைக்குட்பட்ட கோட்டம் – 22 முதல் 33 வரையில் தற்போது 20 மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 235 வகுப்பறைகள் உள்ளன. இப்பள்ளிகளை 31.03.2019 வரையில் ஒப்பந்ததாரர் மூலம் துப்புரவு பணியாளர்கள் அமர்த்தப்பட்டு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும், இவ்வொப்பந்தம் 31.03.2019 அன்றுடன் முடிவடைந்த நிலையில் பாரளுமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகளின் காரணமாகவும் பள்ளிகளுக்கு கோடை விடுமுறை காரணமாகவும் மேற்கண்ட ஒப்பந்தம் 30.04.2019 வரையில் ஒரு மாதத்திற்கு மட்டும் நீட்டிப்பு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் திருப்திகரமாக இல்லாததால் ஒப்பந்தம் முடிக்கப்பட்டது.

தற்போது கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ள நிலையில் மேற்குறிப்பிட்ட அனைத்து பள்ளிகளிலும் வகுப்பறை மற்றும் கழிப்பறைகளை தூய்மை படுத்தவும், சுகாதார பணிகள் மேற்கொள்ளவும் 03.06.2019 முதல் 30.04.2020 வரை கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு துப்புரவு பணியாளர்களை பணி அமர்த்த வேண்டிய நிலை உள்ளது.

வ. எண்	வார்டு எண்	பள்ளியின் விவரம்	வகுப்பறைகளின் எண்ணிக்கை	தேவையான துப்புரவு பணியாளர்கள்	தேவையான கழிப்பறை துப்புரவு பணியாளர்கள்	தேவையான மொத்த பணியாளர்கள்
1	22	சென்னை நடுநிலைப்பள்ளி, கண்ணப்பசாமி நகர் 6வது தெரு	10	1	1	2
2	22	சென்னை நடுநிலைப்பள்ளி, காந்தி பிரதான சாலை	18	2	1	3
3	23	பொப்பிலி ராஜா மேல்நிலைப்பள்ளி, புழல் கேம்ப்	25	3	1	4
4	24	சென்னை நடுநிலைப்பள்ளி, பாலவிநாயகர் கோயில் தெரு	4	1	-	1
5	24	சென்னை நடுநிலைப்பள்ளி, மாரியம்மன் கோயில் தெரு	5	1	-	1
6	24	பாரதிதாசன் 1வது குறுக்கு தெரு	2	1	-	1
7	24	பாரதிதாசன் 6வது தெரு	5	1	-	1
8	24	பள்ளி தெரு	5	1	-	1
9	24	ஜே.பி நகர்	5	1	-	1
10	25	அரசு உயர்நிலைப்பள்ளி, கதிர்வேடு	21	2	1	3
11	27	சென்னை நடுநிலைப்பள்ளி, மாதவரம் பால் பண்ணை	8	1	1	2

12	27	ஜெய்கோபால் கரோடியா அரசு உயர்நிலைப்பள்ளி, மாதவரம்	25	3	1	4
13	28	சென்னை துவக்கப்பள்ளி, பெருமாள் கோயில் தெரு	5	1	-	1
14	29	சென்னை நடுநிலைப்பள்ளி, தேவராஜன் தெரு	24	3	1	4
15	30	சென்னை துவக்கப்பள்ளி, ராஜாஜி தெரு	15	1	-	1
16	31	ஆதி திராவிடர் நல பள்ளி, பாண்டியன் தெரு	10	1	-	1
17	31	பி.என்.எஸ் பள்ளி, கண்ணபிரான் கோயில் தெரு	10	1	-	1
18	32	சென்னை துவக்கப்பள்ளி, லட்சுமி நாராயண பெருமாள் கோயில் தெரு	13	1	1	2
19	32	சென்னை மேல்நிலைப்பள்ளி, பாரதியார் தெரு	19	2	-	2
20	33	சென்னை நடுநிலைப்பள்ளி, பெரியார் சாலை	6	1	1	2
மொத்தம்			**235**	**29**	**9**	**38**

ஒப்பந்த புள்ளி மற்றும் தேசிய நகர்புற திட்டத்தின் கீழ் (NULM) பணியாளர்களின் வித்தியாச தொகை

வ. எண்	பகுதி	ஒப்பந்த புள்ளி					தேசிய நகர்புற திட்டத்தின் கீழ் (NULM) பணியாளர்கள்					வித்தியாச தொகை
		மாதம்	நாள்	பணியாளர்கள்	ஒரு நாள் ஊதியம்	மொத்த செலவு	மாதம்	நாள்	பணியாளர்கள்	ஒரு நாள் ஊதியம்	மொத்த செலவு	
1	6,7,8	11	23	38	514	49,41,596/-	11	23	38	379	36,43,706/-	12,97,890/-

மேற்குறிப்பிட்ட 20 பள்ளிகளில் தூய்மை பணி செய்ய தேவைப்படும் 38 பணியாளர்களை புதிதாக ஒப்பம் கோரி பணி அமர்த்தாமல் தற்போது ஏற்கனவே பள்ளியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் (NULM) பணி அமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு 03.06.2019 முதல் மூன்று சுயஉதவி குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு தூய்மை பணிகள் பள்ளிகளில் தொடர்ச்சியாகவும் அவ்வப்போது தேவையான கூடுதல் பணிகளையும் மேற்கண்ட பணியாளர்களை கொண்டே செய்து கொள்ள ஏதுவாக இருக்கும்.

எனவே, மண்டலம் - 3, வார்டு 22 முதல் 33 வரை உள்ள சுமார் 20 பள்ளிகளில் 38 பணியாளர்களை மூன்று சுயஉதவி குழுக்கள் மூலம் பணி அமர்த்தி 03.06.2019 முதல் 30.04.2020 வரை நடைபெறும் பணிக்கு,

1. மேற்கண்ட பணிகள் மாதத்தில் 23 நாட்களும் மற்றும் மே மாதம் விடுமுறையாக கொண்டு வருடத்தில் 11 மாதங்களுக்கு ஆகும் செலவு 1 x 38நபர் x 23நாள் x 11 மாதம் x ரூ.379/- = ரூ.36,43,706/-

2. பள்ளிகளுக்கு தூய்மை பணி மேற்கொள்ள தேவையான உபகரணங்கள் பிளிசிங் பவுடர், சுண்ணாம்பு மற்றும் இதர பொருட்களை சம்மந்தப்பட்ட வார்டு துப்புரவு ஆய்வாளர் மூலம் வழங்கப்படவும்,

3. மேற்படி பட்டியல்களை செலவீனம் கணக்கு எண் 20-21-07, கணக்கு தலைப்பு எண் 230-150-500ல் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 01.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

******

S.W.M.C.No /A7/ 2117/2019

Resolution No.439/2019 **Date:02-08-2019**

Greater Chennai Corporation – Solid Waste Management - Decentralized processing of solid waste – Selection of Concessionaire to collect, transport and processing the Wet Waste from Bulk Waste Generators and convert it to Bio-CNG (50 MT Capacity) in DFBOT Model under PPP mode – Installation of plant at central Asphaltic yard in Zone-8 – For Administrative Sanction.

Greater Chennai Corporation is the largest generation of solid waste average quantity of 5200 MT/day and it has been transferred to landfill site at Perungudi and Kodungaiyur.

In order to compliance of Solid Waste Management Rule 2016, Decentralized processing facilities is being created for onsite compost of wet waste of near about 51 % (about 2652 MT) of generated waste 64 Nos of Resource Recovery Centers are created to collect, segregate Dry waste of about 49 % of generation waste about 2548 MT per day.

The Bulk Waste Generators viz., large Residence Communities, Hotels, Fruit and Vegetable shops, Restaurants, Marriage halls etc. in the Chennai city are enlisted and Wet Waste generated by them to be processed.

It is proposed to implement to collect, transport and processing the Wet Waste from Bulk Waste Generators and convert it to Bio-CNG (50 MT Capacity) in DFBOT Model under PPP mode. In this process the by-product are Compressed Natural Gas (CNG) and 2 to 3 % of manure. The highlights of this project are

- The Concessionaire should process the wet waste of capacity of minimum 50 MT per day and convert in to Bio-CNG.
- It will be the responsibility of the concessionaire to collect the waste required from the bulk waste generators.
- The wet waste should be scientifically converted in to Bio CNG and residue should be less than of 2 to 3%.
- No residual waste to landfill is allowed. The disposal of the residual product (if any) will be the responsibility of the Concessionaire.
- The Concessionaire will be required to set-up plant and machinery with a control room required for conversion of Wet waste in to Bio-CNG etc.,
- The Plant and machinery and the support infrastructure like yard, storage, water tank, drying –area etc should be constructed by the concessionaire as per the requirement while full-filling all the statutory norms.
- The operational and financial responsibility of collecting the wet waste, segregating the wet waste (if required), transporting it to the project site will be the sole responsibility of the Concessionaire.
- The concessionaire is allowed to charge a nominal tipping fee from the generators of bulk waste without any complaints / criticism.
- A real-time MIS needs to be set-up by the Concessionaire. The officials of GCC shall have access to this MIS on line at any point of time.
- The Concessionaire shall ensure the entire process of conversion of wet waste to Bio-CNG takes place in a complete environment friendly process including bottling & transportation of CNG without causing any health hazard to people employed, people living in the nearby areas and the flora and fauna inhabited in the plant-set-up area.

- The marketing of the by-product of Bio CNG and manure are the responsibilities of the Concessionaire.

Accordingly, the tentative financial model has been prepared for capital investment of this project for an amount of Rs 933.05 Lakhs (Rs. Nine Crore Thirty Three Lakhs Five Thousand only) inclusive of supplying, erection, commissioning of plant with control rooms for 50 MT inclusive of Construction of yard, storage, water tank & Drying Area, Construction of office space, Construction Cost for Labour Rest Shed, Construction of parking, sanitation etc., is submitted before the Scrutiny and Evaluation committee constituted by the Commissioner vide Proceedings of the Commissioner for Scrutiny and Evaluation Committee of Solid Waste Management Department, dated:10.06.2019.

The committee approved the CAPEX amount of Rs 933.05Lakhs (Rs. Nine Crore Thirty Three Lakhs Five Thousand only) for this project.

Hence, to accord the Administrative Sanction for an amount of Rs 933.05 Lakhs (Rs. Nine Crore Thirty Three Lakhs Five Thousand only) for the project of Selection of Concessionaire to collect, transport and processing the Wet Waste from Bulk Waste Generators and convert it to Bio-CNG (50 MT Capacity with tolerance) in DBFOT Model under PPP mode. Orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested.Commissioner's Note dated.31.07.2019 is read.

"SWM- DFBOT model under PPP mode, Administrative sanction approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."

****

பொ.து.ந.க.எண்.இ9/043047/2018

தீர்மான எண்.440 / 2019 **நாள்:08-08-2019**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திருமதி.P.கௌசல்யா, துப்புரவு பணியாளர், பணி எண்.765925, பகுதி-12, கோட்டம்-49, மண்டலம் - 5 அவர்கள் 08.02.2018 அன்று முதல் மருத்துவ இயலாமை ஓய்வில் செல்வதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-12ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.P.கௌசல்யா என்பவர் கடந்த 9 வருடமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றி கொண்டு இருக்கிறார் எனவும், கடந்த சில ஆண்டுகளாக கை கால் விளங்காமல் தன்னால் பெருநகர சென்னை மாநகராட்சி துப்புரவு பணி செய்ய இயலாத காரணத்தினால், மருத்துவ இயலாமை ஓய்வு கோரி ஆணையர் அவர்களிடம் 27.01.2016 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்.

மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களின் 07.11.2017 நாளிட்ட கடிதத்தின்படி, தனியர் அளித்த மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு 07.11.2017 அன்று கடிதம் அனுப்பப்பட்டு தனியர் உடல் நிலையை பரிசோதனை செய்து தனியர் பணி செய்ய தகுதி உள்ளவரா? என உடல் நிலை தகுதி சான்று அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

முதல்வர், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் 22.11.2017 நாளிட்ட மருத்துவ குழு அறிக்கையில் "She is unable to do the routine job, She is unfit for her job" என்று மருத்துவ அறிக்கை பெறப்பட்டதால், மருத்துவ குழு அவர்களின் அறிக்கையின்படி, தனியர் தொடர்ந்து பணி செய்ய தகுதியற்றவர் என சான்றளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்தில் தனியர் உறுப்பினர் இல்லை என 02.05.2018 நாளிட்ட தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி.பி.கௌசல்யா, துப்புரவு பணியாளர் அவர்கள் மீது இன்றைய தேதியில் விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்களின் 07.06.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களின் 16.08.2018 நாளிட்ட கடிதத்தில், திருமதி.P.கௌசல்யா துப்புரவு பணியாளராக 01.03.2006 அன்று பணியில் சேர்ந்துள்ளதாகவும், தனியருக்கு அப்பதவியில் பணிவரண்முறை மற்றும் தகுதிகாண்பருவம் செய்யப்பட்டுள்ளது எனவும், தனியரின் பிறந்த தேதி 07.01.1967 என்பதால், தனியர் வயது முதிர்வு ஓய்வு பெறும் நாள்.31.01.2027 ஆகும்.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 03.07.2019 நாளிட்ட கடிதத்தில், திருமதி.பி.கௌசல்யா, துப்புரவு பணியாளர் வயது முதிர்வு ஓய்வு 31.01.2027 எனவும், தனியரை பணிபுரிய தகுதியில்லாதவர் என அரசு ராஜீவ்காந்தி பொது மருத்துவமனை மருத்துவர் அவர்களால் 22.12.2017 அன்று அறிக்கை அளித்துள்ளதால், மண்டலம்-5ல் மருத்துவ அறிக்கை 08.02.2018 அன்று அறிக்கை பெறப்பட்ட நாள் முதல் மருத்துவ இயலாமை ஓய்வில் செல்ல ஆணை வழங்கப்பட வேண்டும் எனவும், மேலும் தனியர் அவ்வப்போது பணிக்கு வராத நின்ற காரணத்தினால் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எதுவும் தொடரப்படவில்லை என தெரிவிக்கப்பட்டு, மருத்துவ இயலாமை ஓய்வு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

பொ.து.ந.க.எண்.இ9/043047/2018

மேற்காணும் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 03.07.2019 நாளிட்ட கடிதத்தின்படி, திருமதி.பி.கௌசல்யா, துப்புரவு பணியாளர், பணி எண்.765925, பகுதி-12, வார்டு-49, மண்டலம்-5 அவர்களை முதல்வர், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் 22.12.2017 நாளிட்ட மருத்துவ குழு அறிக்கையில் """"Patient is a known case of old ischemic stroke with left hemiporesis with barthal index of 60/100 and modified rashin scale in 3 and CNS vasculitiss with peripheral neuropathy with residual weakness involving the left upper and lower limb since 2015, psychiatrist locomotor disability of 50% and unable to do the routine job, She is unfit for her job" என்று மருத்துவ அறிக்கை அளித்துள்ளதால், தனியர் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் கடன் நிலுவை தொகை ஏதும் இல்லை எனவும், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களால் தெரிவிக்கப்படும் நிலுவை தொகை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய முன்பண நிலுவை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் தனியருக்கு வழங்கபட உள்ள (CPS) ஓய்வூதிய பங்களிப்பு தொகையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 08.02.2018 முதல் மருத்துவ இயலாமை ஓய்வில் செல்வதற்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மருத்துவ இயலாமை ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

பா.து.ந.க.எண்.பி3/1589/2004

தீர்மான எண்.441/2019 **நாள்:08-08-2019**

பாலங்கள் துறை - மண்டலம்- 6, வார்டு - 65 (ம), மண்டலம் 8, வார்டு 95,96ல் கொளத்தூர் வில்லிவாக்கம் எல்.சி 1, இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் பணிக்கான மறுமதிப்பீடு ரூ.61,98,38,000/- (2018-19)க்கு ஒப்புதலுக்கான பின்னேற்பு ஆணையும் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும் அனுமதி.

1.	பணியின் பெயர் மற்றும் பணியின் இடம்	:	மண்டலம்- 6, வார்டு - 65 (ம), மண்டலம் 8, வார்டு 95,96ல் கொளத்தூர் வில்லிவாக்கம் எல்.சி 1, இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் பணி.
2.	மதிப்பீட்டின் ஒப்புதல் பெற்ற விவரம்	:	நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அ.ஆ. (D). எண்.218, நாள். 25.05.18, புதிய பணிகள் வரிசை எண். 7.
3.	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	பாலங்கள் துறை
4.	மறுமதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	:	2018–19 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5.	மதிப்பீட்டின் தொகை	:	ரூ. 61,98,38,000.00
	அ) பணி செலவினம்	:	ரூ. 19,36,22,164.02
	ஆ) மேற்பார்வை செலவினம் 10%		ரூ. 1,93,62,216.40
	இ) சிறு மேற்பார்வை செலவினம் 2.5%	:	ரூ. 48,40,554.10
	ஈ) தரக்கட்டுப்பாடு 1%		ரூ. 19,36,221.64
	உ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் 1%		ரூ. 19,36,221.64
	ஊ) எதிர்பாரா செலவினம் 2.5%	:	ரூ. 48,40,642.94
	எ) பொருட்கள் மற்றும் சேவை வரி	:	ரூ. 1,91,41,956.96
	ஏ) விலையேற்றம் ஈடு செய்தல்		ரூ. 1,45,21,662.30
	ஐ) தளவாடங்கள் மாற்றியமைப்பதற்கான செலவினம்		ரூ. 1,28,91,000.00
	ஒ) நிலம் கையகப்படுத்துதல் (ம) மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்த்துதலுக்கான செலவினம்		ரூ. 33,97,05,360.00
	ஓ) சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம்		ரூ. 70,40,000.00
	மொத்தம்	:	ரூ. 61,98,38,000.00
6.	எந்தெந்த பத்திரிக்கைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	:	1.மாலை முரசு 05.06.2019. 2.நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 05.06.2019.
7.	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்.	:	17.07.2019
8.	நிதியின் தன்மை	:	மூலதன மானிய நிதி (Capital Grant Fund)

9.	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	:	ஆம்
10.	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	:	இரண்டு (e-Tender) இணையதளத்தின் மூலம் பெறப்பட்டது.

ஒப்பந்தபுள்ளி 07.09.2018 (முதல் ஒப்ப நாள்), மறு ஒப்பம் 27.02.2019 (இரண்டாவது ஒப்ப நாள்) அன்றும் கோரப்பட்டது. இரண்டு ஒப்பங்களிலும் ஒப்பந்ததாரர்கள் அதிக விலைப்புள்ளி சமர்பித்து, மேலும் விலை குறைப்பு செய்யாத காரணத்தினால் ஒப்பங்கள் நிராகரிப்பு செய்யப்பட்டு, மூன்றாவது முறையாக ஒப்பங்கள் 03.06.2019 (மூன்றாவது ஒப்ப நாள்) அன்று கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 17.07.2019 அன்று இரண்டு ஒப்பங்கள் e-Tender மூலமாக பெறப்பட்டன. தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஒப்பம் 19.07.2019 அன்று திறக்கப்பட்டது.அதன் விவரங்கள் பின்வருமாறு.

வ.எண்	ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் / திருமதிகள்	பணியின் அலுவலக மதிப்பு (ரூ) (2018-19)	விலைவிகித விழுக்காடு அதிகம்/குறைவு	ஒப்பந்ததாரரின் ஒப்ப தொகை
1.	தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட்	21,27,64,218.62	(+) 26.90%	26,99,97,793.42
2	எம். ராஜ்குமார்		(+) 71.00%	36,38,26,813.84

இரண்டு ஒப்பந்ததாரர்களில் குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்ப சதவீதம் (+)26.90% ஆகும். அவரது ஒப்பத் தொகை ரூ.26,99,97,793.42.

ஒப்பந்ததாரருக்கு 19.07.2019 அன்று விலைக்குறைப்பு கோரி கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, ஒப்பந்ததாரர் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் 24.07.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக ஒப்ப சதவீதத்தை (+)26.90%லிருந்து (+)26.85%க்கு குறைத்துள்ளார்.

ஒப்பந்ததாரருக்கு 01.08.2019 அன்று மேலும் விலைக்குறைப்பு கோரி கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்கள் 01.08.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக ஒப்ப சதவீதத்தை (+)26.85%லிருந்து (+)26.35%க்கு இறுதியாக குறைத்து கொடுத்துள்ளார். அதன்படி திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்ப சதவீதமான (+)26.35% (ஒப்பத் தொகை ரூ.26,88,27,590.22) 2019-2020ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டு தொகையுடன் ஒப்பிடுதலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் **திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட்.**

பணியின் அலுவலக மதிப்பு SOR 2018-19	ஒப்பந்ததாரரின் விலை குறைப்பிற்கு பின்னர் ஒப்ப சதவீதம்	பணியின் அலுவலக மதிப்பு SOR 2019-20	2019-20 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவிகிதம்
ரூ. 1,27,64,218.62	(+)26.35% (ரூ.26,88,27,590.22)	ரூ.23,20,84,255.12	(+)15.83% அதிகம்

ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் (+)26.35% ஆனது 2019-2020ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.23,20,84,255.12 வுடன் ஒப்பிடுகையில் (+)15.83% அதிகமாக உள்ளது.

1. இப்பாலப்பணி மேற்கொள்ளப்படும் இடமானது மக்கள் நெருக்கம் மிகுந்த குடியிருப்பு பகுதியாக இருப்பதால் மிக கவனமாக பணி மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
2. இருப்புப்பாதை பகுதியில் அதிக இரயில் போக்குவரத்து உள்ள காரணத்தினால் ஒப்பந்ததாரர் பணிக்குத் தேவையான பொருட்களை சேமித்து வைப்பதற்கு ஏதுவாக இருப்புக்கிடங்கு மற்றும் வார்ப்பு முற்றம் (Casting Yard) போன்றவற்றை இருப்புப்பாதையின் இருபுறங்களிலும் தனித்தனியே அமைக்கப்பட வேண்டியிருப்பதால் இவ்வகையில் ஒப்பந்ததாரருக்கு கூடுதல் செலவீனம் ஏற்படும்.
3. பணி மேற்கொள்ளப்படும் இடத்திற்கு அருகாமையில் ஒப்பந்ததாரர் பணி அலுவலகம், பணியாளர்கள் அறை, இருப்புக்கிடங்கு, வார்ப்பு முற்றம் (Casting Yard) மற்றும் கான்கிரீட் தயாரிக்கும் இயந்திரங்கள் (RMC Plant) போன்றவற்றை அமைத்துக் கொள்ள எவ்வித அரசு நிலங்களும் இல்லாததால், இவ்வகையிலும் ஒப்பந்ததாரருக்கு கூடுதல் செலவீனம் ஏற்படும்.

மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களை கருத்தில் கொண்டு, ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்ப சதவீதமான (+)26.35%ஐ ஏற்று, இப்பணியினை திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கலாமென ஒப்ப ஏற்புக் குழுவின் (Tender Accepting Committee) பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்- 6, வார்டு – 65 மற்றும் மண்டலம் 8, வார்டு 95,96ல் கொளத்தூர் வில்லிவாக்கம் எல்.சி 1, இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் பணிக்கு 2018-2019ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மறுமதிப்பீட்டுத் தொகையான ரூ.61,98,38,000.00க்கு (GST உட்பட) ஒப்புதலுக்கான பின்னேற்பு ஆணையும், ஒப்பங்கள் கோரப்பட்டதில் குறைந்த ஒப்பசதவீதம் **(+)26.35%** (ஒப்பத் தொகையாக ரூ.26,88,27,590.22) சமர்ப்பித்த திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு இப்பணியினை மேற்கொள்ள ஆணை வழங்க சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு வரிவிதிப்பு மற்றும் நிதி மற்றும் மன்றம் அவர்களின் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மறுமதிப்பீட்டிற்கு பின்னேற்பு அனுமதியும், ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

க.து.ந.க.எண்.பி1/1395/2019

தீர்மான எண்.442/2019 **நாள்:08-08-2019**

கட்டடத் துறை - மதிப்பீடு 2019- 2020 - மண்டலம்-15, வார்டு-196, ஈஞ்சம்பாக்கம், நகர்புற சுகாதார மருத்துவமனையில் (100 Beds) Fire Protection Systems அமைக்கும் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிக்காக ரூ.84,30,000/-க்கு 2019-2020 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி

1	பணியின் பெயர்	மண்டலம்-15, வார்டு-196, ஈஞ்சம்பாக்கம், நகர்புற சுகாதார மருத்துவமனையில் (100 Beds) Fire Protection Systems அமைத்து ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணி.
2	பரிந்துரை செய்தவரின் விவரம்	துணை ஆணையர் (சுகாதாரம்)
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	சுகாதாரத்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2019-2020 ஆம் ஆண்டின் விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 84,30,000.00
	(அ) பணி செலவு	ரூ 69,39,322.50
	(ஆ) எதிர்பாரா செலவு	ரூ. 1,72,206.22
	(இ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ 69,393.23
	(ஈ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ 12,49,078.05
	மொத்தம்	ரூ. **84,30,000.00**
6	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
7	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதிய பணி
8	நிதியின் தன்மை / ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி / கணக்கு குறியீட்டு எண்.	அரசு மான்யம் (NUHM)
9	இக்கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ. 84,30,000.00

இப்பணிக்காக ஏற்கனவே 2018-2019 ஆம் ஆண்டின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ. 62,00,000/- க்கு மன்ற தீர்மான எண். 410/2019, நாள்.25.07.2019 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

தற்போது புதிதாக இப்பணிக்காக 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ. 84,30,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது.

எனவே,

1. மண்டலம்-15, வார்டு-196, ஈஞ்சம்பாக்கம், நகர்புற சுகாதார மருத்துவமனையில் (100 Beds) Fire Protection Systems அமைத்து ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிக்காக ஏற்கனவே ரூ. 62,00,000/-க்கு மன்ற தீர்மான எண். 410/2019, நாள்.25.07.2019ன்படி பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை ரத்து செய்யவும்,

2. தற்போதைய 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள ரூ. 84,30,000/- க்கு (ரூபாய் எண்பத்துநான்கு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி கோரிய ஆணையரது 05.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது".

******

பொ.து.ந.க.எண்.இ6/ 34338/ 2018

தீர்மான எண்.443 / 2019 **நாள்:08-08-2019**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 2018-2019ஆம் பட்டியலாண்டில் வரிவசூலிப்பாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி 2018-2019ஆம் பட்டியல் ஆண்டிற்கான வரிவசூலிப்பாளர் காலிப்பணியிடங்களை ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி ரூ.19500-62000 என்ற ஊதிய விகிதம் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் நிரப்புவதற்கான பட்டியல் 01.07.2018 என்ற மைய நாளிட்டு (Crucial Date) தயாரிக்கப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள் 2009ல் வரிவசூலிப்பாளர் பதவிக்கான நியமன முறை மற்றும் கல்வித்தகுதி கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வரிவசூலிப்பாளர் பதவிக்கான நியமன முறை

பதவியின் பெயர்	நியமன முறை	நிர்ணயிக்கப்படும் தகுதி	நிர்ணய நாள்.	குறிப்பு
வரி வசூலிப்பாளர்	1.அனைத்து கீழ்வகை பதவிகளிலிருந்து பதவி உயர்வு. தகுதிகாண் பருவம் முடித்திருக்க வேண்டும். 2.கீழ்நிலைப் பதவிகளில் 5 ஆண்டுகள் பணிபுரிந்து இருக்க வேண்டும். 3. பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களை 1:2 என்ற விகிதாச்சாரத்தில் அதாவது பதவி உயர்வு மூலம் 1-நபர் மற்றும் நேரடி நியமனம் மூலம் 2-நபர்களை கொண்டும் நிரப்பப்படவேண்டும். ஊட்டப்பதவியில் தகுதியான நபர்கள் இல்லாத பட்சத்தில் பதவி உயர்வுக்கான ஒதுக்கீட்டினை நேரடி நியமனம் மூலம் நிரப்பலாம்.	குறைந்தபட்ச கல்வித்தகுதி	7வது ஊதியக்குழு பரிந்துரை ரூ.19500 - 62000 **நிர்ணய நாள்.** ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1ம் நாள்.	வரிவசூலிப்பாளர் காலிப்பணியிடங்களை 1:2 விகிதாச்சாரம் மூலம் நிரப்பப்பட வேண்டும். நேரடி நியமனத்திற்கு கல்வித்தகுதியாக பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (10th -12th , U.G)

பொ.து.ந.க.எண்.இ6/ 34338/ 2018

வரிவசூலிப்பாளர் பதவிக்கான காலிப்பணியிடங்களின் விவரங்கள் பின்வருமாறு

01.	பதவியின் பெயர்	**வரிவசூலிப்பாளர்**		
02.	மைய நாள்.	**01.07.2018**		
03.	7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி புதிய ஊதிய விகிதம்	**ரூ.19500-62000**		
04.	காலிப்பணியிட விவரம்	1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் மொத்தம்		276
		(அ) தற்காலிக பணியிடம்		000
		(ஆ) நிரந்தர பணியிடம்		276
		(இ) தற்போது பணிபுரிபவர்களின் எண்ணிக்கை		201
		2. (அ) மைய நாளில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம்.	75	
தற்காலிக தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.1ல் இடம் பெற்றுள்ள திருமதி கௌரிமோகன், அவர்கள் மேற்காண் உயர்நீதி மன்ற உத்தரவின்படி, 08.07.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக அரசாணை எண்.928, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (இசட்-1) துறை, நாள் 21.04.2017-ன் படி தமக்கு முன் தேதியிட்டு (retrospectively) பணப்பயனுடன் தாய்சேய் நல அலுவலராக பதவி உயர்வு அளிக்க பரிசீலிக்குமாறு கோரியுள்ளார்.

பொ.து.ந.க.எண்.இ7/20548/2019 &
ம.சே.து.ந.க.எண்.எப்5/0931/2018

அரசாணை எண். 928, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (இசட்-1) துறை, நாள் 21.04.2017–ன் பத்தி-4ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. The Government after careful examination, direct that based on the clearance given, by the Indian Nursing council the Candidates who have under gone Post Basic B.Sc (Nursing) through IGNOU from 1995 to 2005 in the IGNOU approved programme study centres are granted permission to register retrospectively in the Tamil Nadu Nurses and Midwives Council as a one time measurement subject to the following conditions.

- **The Genuinity of the degrees obtained by the Candidate shall be verified with IGNOU by the Council before registration only for the candidates passed out during 1995 to 2005.**
- **The Candidates should not request for any relaxation in Tamilnadu Government.**
- **This should not be quoted as precedent.**

மேற்படி தனியர் ***18.07.1995ல்*** பணியில் சேர்ந்துள்ளார். தனியர் ***December 2004ல் Post Basic B.Sc. Nursing*** முடித்துள்ளார். ***IndianNursing Council*** ல் ஒப்பளிக்கப்படாத கல்லூரியில் பயின்றுள்ளார். ***Indian Nursing Council ல் Post Basic B.Sc. Nursing*** என்ற கல்வி தகுதியினை ஒப்பளிக்கப்படாத கல்லூரிகளில் 1995 முதல் 2005 வரை பயின்றுள்ளவர்களுக்கு ஒரே ஒரு முறை வாய்ப்பளித்து ***Tamilnadu Nurses and Midwives council*** ல் பதிவு செய்யலாம் என அரசாணை வெளியிட்டதின் பேரில், தனியர் ***30.08.2017*** அன்று தன்னுடைய கல்வித்தகுதியினை ***Tamilnadu Nurses and Midwives council ல்*** பதிவு செய்துள்ளார். தனியர் ***Tamil Nadu Nurses and Midwives council*** ல் எவ்வித முன்தேதியிட்டு பதிவு செய்யப்படவில்லை. ***30.08.2017*** லேயே பதிவு செய்துள்ளார். தனியர் 30.08.2017ல் Tamil Nadu Nurses and Midwives council ல் பதிவு செய்துள்ளமையால், அந்நாளைய தேதியினை கொண்டே தனியர் பதிவு மேற்கொண்டமையாக கருதி தனியரின் கல்வித்தகுதியினை 30.08.2017 நாள் முதல் இதர தகுதிகளின் அடிப்படையில் பதவி உயர்வுக்காக தயாரிக்கப்படும் தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலும்.

எனவே,

அ) மேற்படி 11.04.2019 நாளிட்ட உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின் பத்தி-12ல் தாய்சேய் நல அலுவலர் பதவி உயர்வு அளிப்பதற்கான செயலினை 31.07.2019-ற்குள் முடிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதால், முதலில் மேற்டி பதவி உயர்வுக்கான செயலாக (Process) மனுதாரர் 30.08.2017 அன்றைய நாளில் கல்வித்தகுதியினை Tamil Nadu Nurses and Midwives council பதிவு செய்ததினை கருத்தில் கொண்டு இதர தகுதிகளும் பெற்றுள்ள நிலையில், தாய்சேய் நல அலுவலர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் மனுதாரர் பெயரை சேர்த்து, 01.04.2018 மைய நாளிட்டு தாய்சேய் நல அலுவலர் பதவி உயர்வுக்கு தகுதி வாய்ந்த கீழ்கண்ட 3 பணிச்செவிலியர்களைக் கொண்ட இறுதி தெரிவுப்பட்டியல் தயாரிக்கவும்,

2018-2019 ஆம் ஆண்டிற்கான தாய் சேய் நல அலுவலர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல்

வ. எண்.	பெயர் / பதவி / மண்டலம்	துறை / மண்டலம்	பணியில் சேர்ந்த நாள்	தகுதிகாண் பருவம் முடித்த நாள்
1.	திருமதி. கௌரிமோகன் பணிச்செவிலியர்	அடையார் மருத்துவ மண்டலம்-13	18.07.1995	26.10.1997
2.	திருமதி. J. மெருளா பணிச்செவிலியர்	கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம்-10	18.07.1995	29.07.1997
3.	திருமதி. M. எஸ்தர் ஜெயலீலா பணிச்செவிலியர்	தொற்று நோய் மருத்துவமனை, பொது சுகாதாரத்துறை	08.10.2009	08.10.2011

பொ.து.ந.க.எண்.இ7/20548/2019 &
ம.சே.து.ந.க.எண்.எப்5/0931/2018

ஆ) மேற்படி 11.04.2019 நாளிட்ட உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின் பத்தி-14ல் மனுதாரரின் கோரிக்கையினை பரிசீலிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி பதவி உயர்வுக்காக தனியரின் 08.07.2019 நாளிட்ட கோரிக்கையினை பரிசீலித்ததில், அரசாணை எண்:928, நாள்: 21.04.2017ன்படி Post Basic B Sc., Nursing முடித்தது Tamil Nadu Nurses and Midwives council-லில் 30.08.2017 அன்று தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. துணை விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி மற்றும் விதிமுறைகளின்படி, மைய நாளுக்கு முன்பாக B.Sc. Nursing/Post Basic B.Sc. Nursing படிப்பு முடித்து தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். எனவே, 30.08.2017க்கு பின்பு வரும் பட்டியலாண்டில் மட்டுமே மனுதாரரை சேர்க்க இயலும். ஆகவே, தாய்சேய் நல அலுவலர் பதவியை முன்தேதியிட்டு வழங்க இயலாது (retrospective effect) என துறைத்தலைவர் மூலம் தெரிவிக்க ஆணை வேண்டியும்,

இ) இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நபர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ. 9300 – 34800 + தர ஊதியம் 4700 (As per 7th P.C Rs.36,700 – 1,16,200) மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் பதவி உயர்வு வழங்கவும்,

ஈ) மேற்படி பதவி உயர்வு பெறும் நபர்கள் துறை தேர்வு (Account Test For Executive Officer) தேர்ச்சி பெறாமல் உள்ளவர்கள் திருத்தப்பட்ட துணை விதிகளின் படி தாய்சேய் நல அலுவலர் பதவி உயர்வு பெற்ற இரண்டு ஆண்டுக்குள் மேற்கண்டுள்ள தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். தவறும் பட்சத்தில் திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பதவி உயர்வு வழங்குவதற்கும்,

உ) மேற்படி பதவி உயுர்வுக்கு பரிசீலிக்க விண்ணப்பித்துள்ள கீழ்க்காண் செவிலியர்களுக்கு பணிவிதிகளின்படி குறிப்பிட்டுள்ள உரிய கல்வித்தகுதி பெறாததால், தனியர்களின் பெயரை மேற்படி பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்க இயலாது என்பதனை தனியர்களுக்கு கடிதம் வாயிலாக தெரிவிக்கவும்,

1) ஏ. சாந்தலட்சுமி,பணிச்செவிலியர், திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம்-6
2) ஏ. சிசிலியா, பணிச்செவிலியர், திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம்-6
3) கே. காமாட்சி, பணிச்செவிலியர், திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம்-6
4) ஏ. எலிசபெத் ஜெயராணி, பணிச்செவிலியர், திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம்-6
5) ஏ. அம்ரோசியல், பணிச்செவிலியர்,திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம்-6

மேற்கண்ட அ முதல் உ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"Maternal& Child Health Officer இறுதி தெரிவுப்பட்டியல் அ முதல் உ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

S.P.D.C.No.B1/1337-1/2017

Resolution No.486/2019 **Date:22-08-2019**

Special Projects Department - Eco Restoration and Rejuvenation of Villivakkam Tank, taken up under Smart City fund- Orders requested for for placing before the Smart City Company Limited (CSCL) Board for obtaining approval for deviation of quantities in various items of work and for sanction of increased value of work for the Eco-Restoration of Villivakkam tank – For Orders.

Greater Chennai Corporation has taken up the work of Eco Restoration and Rejuvenation of Villivakkam tank under Smart City Initiative. Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited (TNUFISL) has appointed M/s. Infrastructure Management and Advisory Services Private Ltd., (INMASS) as consultant for preparation of Detailed Project Report (DPR) in a most comprehensive way for the Eco Restoration and Rejuvenation of Villivakkam tank. M/s.INMASS has submitted DPR for the Eco Restoration and Rejuvenation of Villivakkam tank for an estimate amount of Rs.16.00 crores.

The Council of Greater Chennai Corporation (vide council Resolution No. 774/2017, Dated: 06.12.2017) and the Chennai Smart City Company Limited (CSCL) Board (7th Board Meeting of CSCL Board, Dated: 26.12.2017) has accorded the Administrative Sanction for this project for an estimate amount of Rs.16.00 Crore. Original proposal for Eco-Restoration of Villivakkam Tank was for providing a main entrance along TVS canal by forming a new road abutting TVS canal and another entrance along 4th main road. Accordingly, facilities such as entrance gate, lobby, parking area, administration block, leisure facilities were proposed and has been approved by High Powered Project Sanctioning Committee.

The work of Eco restoration of the Villivakkam tank has been divided into two parts viz. 1. Eco Restoration & Rejuvenation of Villivakkam Tank and 2. Construction of compound wall for early completion of the works and hence two separate tenders were called and the tenders were awarded after following the due procedures. The contract value and the names of the Contractors are as follows:

Name of the work	Name of the Contractor	Contract Value in Rs.
1. Eco Restoration of Villivakkam tank	M/s.Rajadurai constructions	9,29,98,080.00
2.Construction of Compound Wall	T.M.Subaramaniam & Co	6,25,48,032.22

At the time of preparation of DPR by the consultant, the consultants could not able to enter deep inside the lake as the entire tank was full with thick bushes, thorns, shrubs and other harmful insects and also this tank is serving as an oxidation pond and there was a continuous exhaust of toxic gases and would have cause causality if any human entered. The tank was full of sludge due to the discharge of untreated sewage for decades into the tank. Because of the aforesaid access issues at site, the measurement of silt/sludge was taken by conducting topographic spot levels only along fringes of the lake. Hence, it was projected in the estimate to dispose of 70,000 Cum quantity of silt and the cost for removal of the silt in the estimate is Rs.1,72,00,000/-.

After the work has been commenced by the Contractor M/s.Rajadurai constructions it was found that large amount of silt / slush/sludge has to be removed which is much more than the estimated quantity. After removing 25,000m^3 of silt, the contractor has stated that he could not proceed with further work unless otherwise the Greater Chennai Corporation works out the realistic quantity of silt/sludge existing in the lake and refused to continue further with the work. But only during execution of the work

with the heavy machineries were deployed, the quantity of silt and earthwork excavation was measured exactly and it is found that totally about 2,55,617m^3 silt /sludge and earthwork excavation has to be removed, instead of the original estimate quantity of 70,000 m^3.

This increase in the quantity of silt/sludge to be removed was confirmed through various field observations by the team of Engineers of Storm Water Drain Department, Engineers of Project Management Consultants (PMC) and the Engineers of INMASS, the consultant who prepared the DPR for the project.

Out of this total quantity of 2,55,617 m^3 about 1,15,015 m^3 of silt is found to be slushy and contaminated with sewage and this silt/sludge has to be safely disposed at Kodungaiyur dumping yard. The balance quantity is earth work excavation below the silt and this excavated earth shall be used for filling up of low level area adjacent to the CMWSSB vacant site and for bund formation of the tank and also for formation of Birds nest Island of 20m diameter as detailed below.

1) Earth required for filling CMWSSB land is 43,945 m^3
2) Earth to be used for bund formation is 76,700 m^3
3) Earth to be used for forming Birds nest Island and for mount Formation is 19,960 m$^{3.}$

Hence, the revised value of work for the silt removal, stacking and then filling CMWSSB land including removal and bund formation works out to Rs.5,34,00,000/- against the original estimated cost of Rs.1,71,94,092/- increased.

The proposed road along TVS canal will be very difficult for maneuvering for vehicles and it will create vehicular traffic leading to traffic congestion in the service road and hence it is proposed to construct the main entrance gate through Sidco Nagar 4th main road as per the master plan of DPR. Hence, formation of new road along TVS canal is dispensed with which leads to a cost saving of Rs. 1.27 crore.

The contract value for Eco-Restoration of Villivakkam Tank, is for Rs.9,29,98,080/- for carrying out the works of, De silting of Tank, Construction of Administrative Building, Skating Ring, Water Fountain, Pebble Walk, Aavin Parlor, Maze, Pergola, provision of water quality monitoring system, Immersed aerator, Provision of Entry gate, walkers pathway, protection and strengthening of bund, inlet and outlet arrangements, Open Air Theatre, Children Play Area and outdoor Gym, Parking near Entrance, Parking near Food Court, Inlet arrangements, Service road, Foreshore bund compound wall and CCTV camera. The total value of the work including the above and due to excess quantity in the items of Earthwork excavation, Bund Formation, De silting and Carting of earth, works out to **Rs11,59,58,606/-** which is 24.69% higher than the contract value of Rs 9,29,98,080/-. The additional cost involved is **Rs.2,29,60,526/-**

Hence, to meet out the additional cost involved, the subject has to be placed before the CSCL Board for getting sanction for carrying out the works at an value of **Rs11,59,58,606/-** and for the additional cost involved for an amount of **Rs.2,29,60,526/-** under smart city fund.

Due to the large volume of silt to be removed and the Ground water level, the work could not be carried out speedily and hence extension of time is required for carrying out the work for a further period of 9 months from 10.05.2019.

Hence,

1. To sanction of the revised value of work, for an amount of **Rs11,59,58,606/-** for Eco-Restoration of Villivakkam Tank adopting the rates quoted in the tender which 24.69% higher than the contract value of the work.

S.P.D.C.No.B1/1337-1/2017

2. To place the above before the Chennai Smart City Limited Board for sanctioning to carry out the excess/deviation in quantities in various items of works for an value of **Rs11,59,58,606/-** which 24.69% higher than the contract value of the work and for sanction of additional cost of **Rs.2,29,60,526/-** under smart city fund .
3. For extension of time for a further period of 9 months for completion of the work up to 09.02.2020.

Sl.No. 1 to 3 above, Orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.20.08.2019 is read.

"Sl.No. 1 to 3 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."

****

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1413/2019

தீர்மான எண்.487/2019 **நாள்:27-08-2019**

இயந்திரப் பொறியியல் துறை - தூய்மை இந்தியா திட்ட சேமிப்பு நிதியிலிருந்து 95 எண்ணிக்கையில் பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனம் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி.

ஆணையர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களிடமிருந்து பெறப்பட்ட 7 வது மாநில உயர் அதிகாரக் குழு கூட்ட நடவடிக்கை குறிப்பில் 13.08.2018 அன்று நடைபெற்ற மாநில உயர் அதிகாரக்குழு கூட்டத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தூய்மை பணிக்கென உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்கு கொள்முதல் செய்வதற்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

வ. எண்	பணியின் பெயர்	நிதி ஒதுக்கீடு விவரம் (இலட்சத்தில்)
1.	ஒரு எண்ணிக்கையில் ஆம்பிபியன் உபகரணம் கொள்முதல் செய்தல்	ரூ.800 இலட்சம்
2.	6 எண்ணிக்கையில் ரீசைக்லர் வசதியுடன் கூடிய சக்ஷன் கம் ஜெட்டிங் வாகனம்	ரூ.3200 இலட்சங்கள்
3.	411 எண்ணிக்கையில் பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனம் கொள்முதல் செய்தல்	ரூ.740 இலட்சங்கள்
4	Monitoring & Installing 4000 Nos 0f RFID Tag &150 Nos RFID Reader	ரூ.17 இலட்சங்கள்

இதன் அடிப்படையில் வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மின்னணு ஒப்பங்கள் கோரப்பட்டது. இவற்றில் வரிசை எண். 1 முதல் 3 வரையிலான பணிகளுக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனங்களிடமிருந்து உபகரணங்களை கொள்முதல் செய்ய மன்றத் தீர்மானம் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த பணியாணையின்படி, கொள்முதல் விலையானது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினைக் காட்டிலும் குறைவானதாகும். மேலும், வரிசை எண் -4ல் தெரிவிக்கப்பட்டுள்ள பணியானது மண்டலம் 4,5,6, மற்றும் 8ல் பயன்படுத்தி வரப்படும் காம்பாக்டர் வாகனங்கள் மற்றும் காம்பக்ட குப்பை தொட்டியில் RFID உபகரணம் பொருத்தி குப்பை அகற்றும் பணியை கண்காணிப்பதாகும். அந்த பணியினை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் கொண்டு திறம்பட மேற்கொள்வது இயலாத காரணத்தால் இப்பணி கைவிடப்படுகிறது. இதன் மூலம் துய்மை இந்தியா திட்டத்தின் கீழ் (SBM-7th SHPC) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் சேமித்த தொகையின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	பணியின் பெயர்	நிதி ஒதுக்கீடு விவரம் (இலட்சத்தில்)	பணி ஆணை வழங்கப்பட்ட விவரம்	மீதத் தொகை
1.	ஒரு எண்ணிக்கையில் ஆம்பிபியன் உபகரணம் கொள்முதல் செய்தல்	ரூ.800 இலட்சம்	ரூ.753 இலட்சங்கள்	47 இலட்சங்கள்
2.	6 எண்ணிக்கையில் ரீசைக்லர் வசதியுடன் கூடிய சக்ஷன் கம் ஜெட்டிங் வாகனம்	ரூ.3200 இலட்சங்கள்	ரூ.3120 இலட்சங்கள்	80 இலட்சங்கள்
3.	411 எண்ணிக்கையில் பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனம் கொள்முதல் செய்தல்	ரூ.740 இலட்சங்கள்	ரூ.718 இலட்சங்கள்	ரூ.22 இலட்சங்கள்
4	Monitoring & Instaling 4000 Nos 0f RFID Tag &150 Nos RFID Reader	ரூ.17 இலட்சங்கள்	கொள்முதல் கைவிடப்பட்டது	ரூ.17 இலட்சங்கள்
மொத்த சேமிப்புத் தொகை				ரூ.166 இலட்சங்கள்

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1413/2019

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 411 எண்ணிக்கையில் பேட்டரி மூலம் இயங்கும் 3 சக்கர வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்வகை வாகனங்களின் தேவை அதிக அளவில் உள்ளதால் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மொத்த சேமிப்புத் தொகையான ரூ.166 இலட்சத்தில் கூடுதலாக தேவைப்படுகின்ற பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களை கொள்முதல் செய்யலாம்.

கடந்த மார்ச்-2019ல்தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ்411 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் (4 சிப்பங்களாக) ஒப்பம் கோரி ஒரு வாகனத்திற்கான குறைந்த விலைப்புள்ளியானது ரூ.1,74,647.20 வீதத்தில் கொள்முதல் செய்வதற்கு பணியாணை வழங்கப்பட்டு வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வரப்படுகிறது. பணியாணை வழங்கப்பட்ட விவரம் கீழ்வருமாறு:

வ. எண்.	கோப்பு எண்.	கொள்முதல் விபரம்	ஒரு வாகனத்தின் விலை	மொத்த தொகை
1	M1/2347 A/2019 Package 1	100 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள்	ரூ.1,74,647.20	ரூ.1,74,64,720/-
2	M1/2347 A/2019 Package 2	100 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள்	ரூ.1,74,647.20	ரூ.1,74,64,720/-
3	M1/2347 A/2019 Package 3	100 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள்	ரூ.1,74,647.20	ரூ.1,74,64,720/-
4	M1/2347 A/2019 Package 4	111 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள்	ரூ.174,647,20	ரூ.1,93,85,839/-

எனவே, பேட்டரி மூலம் இயங்கும் ஒரு வாகனத்திற்கான விலை ரூ.1,74,647.20 என்ற விகிதத்தில் சேமிப்பு தொகையான ரூ.166 இலட்சத்தில் 95 வாகனங்கள் கொள்முதல் செய்யலாம். இதன்படி, ஒரு வாகனத்தின் விலை ரூ.1,74,647.20 வீதம் 95 வாகனங்களுக்கான மொத்த தொகை(ரூ. 1,74,647.20 X 95) ரூ. 1,65,91.484/-ஆகும்.

தமிழ்நாடு ஒளிவுமறைவில்லா ஒப்ப விதிகளின்படி, ஒப்பம் கோரி பணி ஆணை வழங்கப்பட்டுள்ளதால் தேவையின் அடிப்படையில் ஒப்பத்தில் கோரியிருந்த கொள்முதல் அளவினை 25% உயர்த்திக்கொள்ளலாம் என்பதால் தற்போது கொள்முதல் செய்யவுள்ள 95 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களை கீழ்கண்ட அட்டவணையின்படி ஏற்கனவே பணி ஆணை வழங்கப்பட்ட ஒப்பத்தில் 25 சதவீதத்திற்கு மிகாமல் கொள்முதல் எண்ணிக்கையை உயர்த்திக்கொள்ளலாம்.

வ. எண்.	கோப்பு எண்	ஏற்கனவே வழங்கப்பட்ட பணியாணை		கூடுதல் கொள்முதல்			ஒப்பந்ததாரர் விபரம்
		எண்ணிக்கை	மொத்த தொகை	எண்ணிக்கை	ஒரு வாகனத்தின் விலை	மொத்த தொகை	
1	M1/2347 A/ 2019 Package 1	100	ரூ.1,74,64,720/-	23	ரூ.1,74,647.20	ரூ.40,16,886/-	M/s. Mecotron Systems (Authorised Dealer for M/s. REEP Industries Pvt. Ltd., Manufacturer of Battery Operated Vehicles
2	M1/2347 A/ 2019 Package 2	100	ரூ.1,74,64,720/-	23	ரூ.1,74,647.20	ரூ.40,16,886/-	
3	M1/2347 A/ 2019 Package 3	100	ரூ.1,74,64,720/-	23	ரூ.1,74,647.20	ரூ.40,16,886/-	
4	M1/2347 A/ 2019 Package 4	111	ரூ.1,93,85,839/-	26	ரூ.1,74,647.20	ரூ.45,40,827/-	

இதற்கான செலவீனத்தினை தூய்மை இந்தியா திட்டதின் கீழ் (SBM-7th SHPC) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் சேமித்த தொகையிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. 95 எண்ணிக்கையில் பேட்டரி மூலம் இயங்கும் 3 சக்கர வாகனங்கள் ஒன்றின் விலை ரூ.1,74,647.20 இலட்சம் வீதம் ரூ.1,65,91,484/- செலவினத்தில் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1413/2019

2. இதற்கான செலவீனத்தினை தூய்மை இந்தியா (SBM-7thSHPC) திட்டசேமிப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,
3. 8-வது உயர்மட்ட அதிகாரக் குழுவின் ஒப்புதலை எதிர்நோக்கி, இக்கொள்முதலை மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,
4. மேற்கண்ட இனம் 1 முதல் 3வரை ஏற்கும் பட்சத்தில், கொள்முதல் செய்யப்பட உள்ள பேட்டரி மூலம் இயங்கும் 95 எண்ணிக்கையிலான வாகனங்களை ஏற்கனவே இதே வகை வாகனங்கள் கொள்முதல் செய்வதற்கு 4 சிப்பங்களாக பணி ஆணை வழங்கப்பட்டதில் 25% மிகாமல் உயர்த்தி கீழ்கண்டவாறு கூடுதல் கொள்முதலுக்கான பணி ஆணை வழங்கவும்,

வ. எண்.	கோப்பு எண்	ஏற்கனவே வழங்கப்பட்ட பணியாணை		கூடுதல் கொள்முதல்			ஒப்பந்ததாரர் விபரம்
		எண்ணிக்கை	மொத்த தொகை	எண்ணிக்கை	ஒரு வாகனத்தின் விலை	மொத்த தொகை	
1	M1/2347 A/ 2019 Package 1	100	ரூ.1,74,64,720/-	23	ரூ.1,74,647.20	ரூ.40,16,886/-	M/s. Mecotron Systems (Authorised Dealer for M/s. REEP Industries Pvt. Ltd., Manufacturer of Battery Operated Vehicles
2	M1/2347 A/ 2019 Package 2	100	ரூ.1,74,64,720/-	23	ரூ.1,74,647.20	ரூ.40,16,886/-	
3	M1/2347 A/ 2019 Package 3	100	ரூ.1,74,64,720/-	23	ரூ.1,74,647.20	ரூ.40,16,886/-	
4	M1/2347 A/ 2019 Package 4	111	ரூ.1,93,85,839/-	26	ரூ.1,74,647.20	ரூ.45,40,827/-	

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 20.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனம் கொள்முதல் செய்ய, 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ3/53464/1987

தீர்மான எண்.488/2019 **நாள்:27-08-2019**

நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-10 - வார்டு எண்.136 - 2600 சதுர அடி நிலம் - புல எண்.4854/1- தியாகராய நகர் கிராமம் - தியாகராய சாலை மற்றும் டாக்டர் நாயர் சாலை சந்திப்பு - கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் பயன்படுத்தப்படும் 2600 சதுர அடி நிலம் - மேலும் 30 ஆண்டுகளுக்கு குத்தகை நீடிப்பு வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10 – வார்டு எண்.136 - தியாகராய நகர் கிராமம், தியாகராய சாலை மற்றும் டாக்டர் நாயர் சாலை சந்திப்பில் உள்ள புல எண். 4854/1-ல் உள்ள 2600 சதுர அடி நிலத்திற்கு கீழ்கண்ட மன்றத் தீர்மானங்களின்படி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டது.

மன்றத் தீர்மானங்கள்

மன்றத் தீர்மான	கிராமம் தியாகராய நகர் கிராமம் மண்டலம்-10 புல எண்	பரப்பளவு/ பயன் படுத்தப்படும் அளவு	குத்தகை காலம்	குத்தகைத் தொகை (ஒரு மாதம் ஒரு சதுர அடிக்கு)
மன்றத் தீர்மான எண் 1327/86 நாள். 27.11.1986; எண்.196/87 நாள். 2.3.87	4854/1	2600	ஜனவரி 1987 முதல் மே 1987 வரை	ரூ.1/-
மன்றத் தீர்மான எண்.784/87 நாள். 09.07.1987	4854/1	2600	ஜூன் 1987 முதல் நவம்பர் 1987 வரை	ரூ.1/- (Rs.2214/- pm)
மன்றத் தீர்மான எண்.76/90 நாள். 08.02.1990	4854/1	பயன்படுத்தப்படும் 2214 சதுர அடி நிலத்திற்கு	டிசம்பர் 1987 முதல் 28.02.1990 வரை	ரூ.1/-
மன்றத் தீர்மான எண்.56/91 நாள். 17.01.1991 அரசாணை எண் 244, 23.08.1991 சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.2857/95 நாள். 14.09.1995	4854/1	பயன்படுத்தப்படும் 2214 சதுர அடி நிலத்திற்கு	01.03.1990 முதல் 3 ஆண்டுகள்	ஆண்டுக்கு சந்தை விலையில் 14 சதவீதம்

மேற்படி நிறுவனத்தினரால் பயன்படுத்தப்படும் 2214 சதுர அடி நிலத்திற்கு ஒரு மாதத்திற்கு ஒரு சதுர அடி நிலத்திற்கு ரூ.1/- வீதம் ரூ.2214/- செலுத்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்,56/91 நாள். 17.01.1991-ல் மூன்று ஆண்டுகளுக்கு அதாவது 01.03.1990 முதல் குத்தகை நீட்டிப்பு செய்தும் மற்றும் மேற்படி நிலத்திற்கு ஆண்டொன்றுக்கு சந்தை விலையில் 14 சதவீதம் குத்தகை தொகை வசூலிக்கவும் மேற்படி பரிந்துரைகளை அரசின் ஆணைக்காக அனுப்பவும், மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ3/53464/1987

அரசாணை எண் 244, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள். 23.08.1991, பெருநகர சென்னை மாநகராட்சி, தனி அலுவலரின் தீர்மானம் எண். 664/90 நாள். 11.07.1990 அடிப்படையில், சென்னை, மண்டலம்-10 வார்டு எண்.136, தியாகராய நகர் கிராமம், நகர புல எண்.4854/1ல் உள்ள 2600 சதுர அடி பொது நிலத்தை கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு 01.03.1990 முதல் 30 ஆண்டுகளுக்கு குத்தகை வழங்கவும் மற்றும் அரசாணை எண்.730, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்.14.04.1976-ல் வெளியிடப்பட்டுள்ள தடையாணையிலிருந்து விலக்களித்து சென்னை மநாகராட்சி ஆணையருக்கு கீழ்கண்ட நிபந்தனைகளின்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

1. குத்தகைக்குவிடப்படுகின்ற நிலத்தின் மீது நிரந்தரமான கட்டிடங்கள் ஏதும் கட்டுதல் கூடாது என்றும்;
2. குத்தகைக்குவிடப்படும் நிலத்தை யாருக்கும் உள் வாடகைக்கு விடக்கூடாது என்றும்;
3. சென்னை மாநகராட்சி, தனி அலுவலர் தீர்மானம் எண்.225/89, நாள் 14.03.1989ன்படி மேற்படி நிலத்திற்கு ஆண்டொன்றுக்கு சந்தை விலையில் 14 சதவீதம் வாடகையாக வசூலிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசாணை எண்.142, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.06.07.1995-ன்படி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நிரந்தர கட்டிடம் கட்டுவதாக அரசுக்கு தெரிவித்துள்ள கோரிக்கை ஏற்பது குறித்து, மேற்கண்ட நிறுவனம் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை முழுமையாக செலுத்தும்பட்சத்தில் ஏற்கெனவே உள்ள குத்தகை நிபந்தனைகளின்படி மேற்படி அரசாணை எண் 244, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 23.08.1991, அரசாணை எண்.730, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்.14.04.1976-ல் வெளியிடப்பட்டுள்ள தடையாணையிலிருந்து விலக்களித்து சென்னை மநாகராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.2857/95 நாள். 14.09.1995-ன்படி அன்றைய சந்தை விலை நிலவரப்படி மேற்குறிபிட்டுள்ள நிலத்தின் சந்தை மதிப்பு ரூ.6,37,500/- ஆகும். இதில் 14 சதவீதம் கணக்கீடு செய்ததில் ஆண்டுக்கு ரூ.89,250/- தொகையில் மாத குத்தகையாக ரூ.7437/- நிர்ணயிக்கப்பட்டு 01.03.1990 முதல் 30.06.1995 வரையிலுள்ள தொகை ரூ.3,48,000/- மற்றும் ஜூலை 1995 மாதம் ரூ.7437/- ஆக மொத்தம் ரூ.3,55,437/- செலுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் மேற்படி தொகை செலுத்தப்பட்டதற்கான பற்றுச் சீட்டு இக்கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. இதனைதொடர்ந்து கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் குத்தகை தொகையினை உயர்த்தி வழங்காமல் இன்று வரை ரூ.7437/- மட்டுமே செலுத்தி வருகிறது.

மேலும்,

1. அரசாணை எண்.142, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 06.07.1995ன்படி மேற்படி நிலத்திற்கு ஆண்டொன்றுக்கு சந்தை விலையில் 14 சதவீதம் குத்தகை தொகையாக வசூலிக்கலாம் என்றும்,
2. 01.03.1990 முதல் 30 ஆண்டுகளுக்கு குத்தகை வழங்குவது எனவும்,
3. கோ – ஆப்டெக்ஸ் நிறுவனம் நிரந்தர கட்டிடம் கட்டுவதாக தெரிவித்துள்ள நிலையில் மேற்கண்ட நிறுவனம் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை முழுமையாக செலுத்தும்பட்சத்தில் ஏற்கெனவே உள்ள குத்தகை நிபந்தனைகளின்படி பெருநகர சென்னை மாநகராட்சி குத்தகை ஒப்பந்தம் செயல்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

05.07.1996 நாளிட்ட கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை 25 சதவீதம் குத்தகை தொகையினை உயர்த்துவது தொடர்பான விவரத்தை குத்தகை ஒப்பந்த பத்திரத்தில் இணைக்குமாறு தெரிவித்துள்ளார். ஆனால், குத்தகை ஒப்பந்த பத்திரத்தில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை பெருநகர சென்னை மாநகராட்சி மன்றம் மூலம் குத்தகை உயர்வினை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்று குத்தகை ஒப்பந்த பத்திர நகலில் பத்தி-7-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வளவு சதவீதம் உயர்வு செய்யலாம் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை.

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ3/53464/1987

மாவட்ட வருவாய் அலுவலரின் 29.08.1996 மற்றும் 13.05.1997 நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தில் ஒவ்வொரு ஆண்டும் 10 சதவீதம் குத்தகை தொகை உயர்வினை ஏற்றுக் கொள்ளுமாறு மேற்படி நிறுவனத்திற்கு இத்துறை மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதுகுறித்து மேற்படி நிறுவனத்திடம் இருந்து பதில் ஏதும் வரப்பெறவில்லை. எனவே, 15.02.2002 நாளிட்ட நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டது. மேலும், 02.02.2018 நாளிட்ட கடிதத்தில் 19.02.2018 அன்று காலை 11.00 மணிக்கு துணை ஆணையர்/வமநி அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு ஆஜராகுமாறு இவ்வலுவலக கடிதம் அனுப்பப்பட்டது.

அதன்படி, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் துணை மண்டல மேலாளர் அவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துக் கொண்டார். இதனைதொடர்ந்து 1995-ம் ஆண்டு முதல் 31.03.2018 வரை 10 சதவீத குத்தகை தொகை உயர்வின்படி மேற்படி நிலத்தை பயன்படுத்தியதற்காக செலுத்தப்பட வேண்டிய குத்தகை நிலுவைத் தொகை (சேவை வரி மற்றும் GST வரி) ரூ.63,02,754/-ஐ செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், இந்நிலுவைத் தொகையை தள்ளுபடி செய்ய இயலாது என்று மேற்படி அலுவலருக்கு இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேலாண்மை இயக்குநர் அவர்களின் 22.10.2018 நாளிட்ட கடிதத்தில் 01.04.1996 முதல் 30.09.2018 வரை தற்போது செலுத்தி வரும் குத்தகை தொகை ரூ.7437/-ல் இருந்து 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை 15% குத்தகை தொகை உயர்வு செய்து செலுத்திய தொகை போக செலுத்தப்பட வேண்டிய மீதத் தொகை ரூ.18,08,496/- (பதினெட்டு இலட்சத்து எட்டாயிரத்து நானூற்று தொண்ணூற்றாறு) செலுத்திட தயாராக உள்ளதாகவும் இந்த உயர்வினை தாங்கள் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளும்படி தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானங்களின்படி மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைமுறையில் வசூலிக்கப்படும் குத்தகை தொகையிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து குத்தகை / குத்தகை நிலுவைத் தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 18.02.2019 நாளிட்ட ஆணையில் 01.04.1996 முதல் 31.03.2018 வரை மூன்றாண்டுக்கு ஒருமுறை 15 சதவீதம் குத்தகை தொகை உயர்வு செய்துதருமாறும் அதன்படி குத்தகை நிலுவைத் தொகை செலுத்த தயாராக உள்ளதாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் வேண்டுகோள் வைத்துள்ளதை தொடர்ந்து கீழ்கண்ட பட்டியலின்படி புதிய கணக்கீடு செய்யப்பட்டது.

15 சதவீத குத்தகை தொகை உயர்வு கணக்கீடு

வ. எண்	காலம்	செலுத்தப்பட்டு வரும் மாத குத்தகை தொகை ரூ.	15 சதவீத உயர்வு செலுத்திவரும் தொகை போக வித்தியாச தொகை ரூ.	செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை ரூ.	சேவை வரி மற்றும் ஜி.எஸ்.டி
1	01.04.1996 முதல் 31.03.1999 வரை	ரூ. 7437/-	ரூ. 8552 x 36	307872	-
2	01.04.1999 முதல் 31.03.2002 வரை	ரூ. 7437/-	ரூ. 9835 x 36	354060	-
3	01.04.2002 முதல்31.03.2005 வரை	ரூ. 7437/-	ரூ. 11310 x 36	407160	-
4	01.04.2005 முதல்31.05.2007 வரை	ரூ. 7437/-	ரூ. 13006 x 26	338156	-
5	01.06.2007 முதல்31.03.2008 சேவை வரி 12.36 %	ரூ. 7437/-	ரூ. 13006 x 10	130060	16075

6	01.04.2008 முதல் 31.03.2009 வரை சேவை வரி 12.36 %	ரூ. 7437/-	ரூ. 14957 x 12	179484	22184
7	01.04.2009 முதல் 31.03.2011 வரை சேவை வரி 10.30 %	ரூ. 7437/-	ரூ. 14957 x 24	358968	36973
8	01.04.2011 முதல் 31.03.2012 வரை சேவை வரி 10.30 %	ரூ. 7437/-	ரூ. 17200 x12	206400	21259
9	01.04.2012 முதல் 31.03.2014 வரை சேவை வரி 12.36 %	ரூ. 7437/-	ரூ. 17200 x 24	412800	51022
10	01.04.2014 முதல் 31.05.2015 வரை சேவை வரி 12.36 %	ரூ. 7437/-	ரூ. 19780 x 14	276920	34227
11	01.06.2015 முதல் 31.10.2015 வரை சேவை வரி 14 %	ரூ. 7437/-	ரூ. 19780 x 5	98900	13846
12	01.11.2015 முதல் 14.11.2015 வரை (சேவை வரி 14 %)	ரூ. 7437/-	ரூ. 19780 x 14/30	9231	1292
13	15.11.2015 முதல் 30.11.2015 வரை (சேவை வரி 14.5%)	ரூ. 7437/-	ரூ. 19780 x 16/30	10549	1529
14	01.12.2015 முதல் 31.05.2016 வரை சேவை வரி 14.5%	ரூ. 7437/-	ரூ. 19780 x 6	118680	17209
15	01.06.2016 முதல் 31.03.2017 வரை (சேவை வரி 15%)	ரூ. 7437/-	ரூ. 19780 x 10	197800	29670
16	01.04.2017 முதல் 30.06.2017 வரை (சேவை வரி 15%)	ரூ. 7437/-	ரூ. 22747 x 3	68241	10236
17	01.07.2017 முதல் 31.03.2018 வரை (GST 18%)	ரூ. 7437/-	ரூ. 22747 x 9	204723	36850
			மொத்த குத்தகை நிலுவைத் தொகை	3680004	
	01.04.1996 முதல் 31.03.2018 வரை	ரூ. 7437 x 264 மாதம்	இதுவரை செலுத்தப்பட்டு ள்ள குத்தகை தொகை	19,63,368	
			நிலுவைத் தொகை மற்றும் சேவை வரி	1716636	2,92,372
			செலுத்த வேண்டிய மொத்த குத்தகை நிலுவைத் தொகை சேவை வரியுடன்	**20,09,008**	

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ3/53464/1987

அதன்படி...

வ. எண்.	வருடம்	3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ரூ.7437/-ல் இருந்து 15% குத்தகை தொகை உயர்வு ரூ.	01.04.1996 முதல் 31.03.2018 வரை செலுத்திய குத்தகை தொகை ரூ.7437/-	செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.	சேவை வரி மற்றும் GST வரி	மொத்த நிலுவைத் தொகை ரூ.
1	01.04.1996 முதல் 31.03.2018 வரை	**ரூ. 3680004**	**ரூ. 19,63,368**	**ரூ. 1716636**	**2,92,372**	**20,09,008**

எனவே, ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானங்களின்படி மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் உயர்வு கணக்கீடு செய்யப்பட்டு நிலுவைத் தொகை வசூலிக்கப்பட்டு வருவதால் மேற்படி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களின் கோரிக்கையினை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரால் ஏற்கப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு நிலுவையிலுள்ள குத்தகை தொகை ரூ.20,09,008/- செலுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்படி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களுக்கு அனுப்பியுள்ள 07.05.2019 நாளிட்ட கடிதத்தில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதமாக குத்தகை தொகையை உயர்வு செய்ததற்காக மேற்கண்ட நிறுவனத்தின் சார்பாக நன்றி தெரிவித்துள்ளார். மேலும், 01.04.1996 முதல் 30.06.2017 வரை உள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய சேவை வரி தொகைக்கு விலக்கு அளிக்குமாறு கோரியுள்ளார்.

21.05.2019 நாளிட்ட துணை மண்டல மேலாளர் அவர்களின் கடிதத்தில் 01.04.1996 முதல் 31.03.2018 வரை செலுத்த வேண்டிய குத்தகை நிலுவை தொகை ரூ.17,16,636/- மற்றும் 01.04.2018 முதல் 31.03.2019 வரை செலுத்தப்பட வேண்டிய குத்தகை நிலுவைத் தொகை ரூ.1,83,720/- சேர்த்து மொத்தம் ரூ.19,00,356,00/-யும் மற்றும் (01.07.2017 முதல் 31.03.2019 வரை சரக்கு மற்றும் சேவை வரி (GST)) தொகை ரூ.85,984/- சேர்த்து ரூ.19,86,340/-ஐ தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிமிடெட், எழும்பூர் கிளையின் காசோலை மூலமாக Revenue Officer Corporation of Chennai என்ற பெயரில் செலுத்தியுள்ளார். (காசோலை எண்.856546 காசோலை நாள்.20.05.2019 மற்றும் தொகை ரூ.19,86,340/-ஐ பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் 27.05.2019 அன்று சமர்ப்பிக்கப்பட்டது (Recepit No.05/2019-20/0174955).

மேலும், 01.04.2019 மற்றும் 31.05.2019 வரை (இரண்டு மாதங்கள்) செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை ரூ.15309/- மற்றும் ரூ22747/- சேர்த்து ரூ.38,056/- மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST)) தொகையாக ரூ.8190/- மொத்தம் சேர்த்து ரூ.46,246/-ஐ தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிமிடெட், எழும்பூர் கிளையின் காசோலை மூலமாக Revenue Officer Corporation of Chennai என்ற பெயரில் செலுத்தியுள்ள காசோலையை (காசோலை எண்.856578, காசோலை நாள்.31.05.2019, தொகை ரூ.46,246/-) பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் 11.06.2019 அன்று சமர்ப்பிக்கப்பட்டது (Recepit No.06/2019-20/0216708).

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் அரசு முதன்மை செயலாளருக்கு அனுப்பியுள்ள 31.05.2019 நாளிட்ட கடிதத்தில், தற்பொது உள்ள குத்தகை காலம் 31.03.2020 உடன் முடிவடைவதால் 01.04.2020 முதல் 31.03.2050 வரை 30 ஆண்டுகளுக்கு குத்தகை நீடிப்பு செய்து தருமாறும் மற்றும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை 25 சதவீதம் அல்லது 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை 15% சதவீதம் குத்தகை தொகையை உயர்வு செய்து மாதம் செலுத்த வேண்டிய குத்தகை தொகையை நிர்ணயிக்குமாறும் (சிறப்பு அதிகாரி மன்றத்துறை தீர்மானத்துடன்), தெரிவிக்கப்பட்டுள்ளது.

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ3/53464/1987

04.07.2019 நாளிட்ட அரசு முதன்மை செயலாளர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறைக்கு) அவர்களின் மேற்குறிப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் இக்கோப்பு தொடர்பான குறிப்புரையினை தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10 – வார்டு - 136 தியாகராய நகர் கிராமம், தியாகராய சாலை மற்றும் டாக்டர் நாயர் சாலை சந்திப்பில் புல எண்.4854/1-ல் உள்ள, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் குத்தகைக்காலம் 31.03.2020 அன்று முடிவடைவதால் மேலும் 30 ஆண்டுகளுக்கு (01.04.2020 முதல் 31.03.2050) வரை குத்தகை நீடிப்பு வழங்குவதற்கும் மற்றும் **தற்போது செலுத்தப்படும் தொகையின் அடிப்படையில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை 25 சதவீதம்** அல்லது **3 ஆண்டுகளுக்கு ஒருமுறை 15% சதவீத குத்தகை உயர்வு செய்வதற்கும்**, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"குத்தகை நீடிப்பு வழங்குவதற்கும் மற்றும் 15% once in every 3 years என குத்தகை உயர்வு செய்வதற்கும் சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

க.து.ந.க.எண்.பி11/1664/2015

தீர்மான எண்.489/2019 **நாள்:27-08-2019**

கட்டடத் துறை - மண்டலம் - 11 வார்டு - 151 வளசரவாக்கத்தில் கட்டப்பட்டு வரும் நகர்புற சமூக நல மருத்துவமனை (100 படுக்கைகள்) கட்டும் பணிக்கு ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.S.R.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு ஒப்பத் தொகைக்கு கூடுதலாக 23.10% ற்கு பட்டி தீர்வு செய்ய அனுமதி.

மண்டலம்-11, வார்டு-151 வளசரவாக்கத்தில் கட்டடப்பட்டு வரும் நகர்புற சமுதாய மருத்துவமனை (100 gL¡ifféY) கட்டும் பணிக்காக ரூ.7,95,00,000.00ற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மதிப்பீட்டிற்கு மன்றத்தீர்மானம் (மன்றத்தீர்மான எண்.460/2015 நாள்.31.08.2015) பெறப்பட்டு 07.10.2015 அன்று ஒப்பம் கோரப்பட்டது, இதில் குறைந்த ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்ட திருவாளர்கள்.S.R.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் 2014-2015ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ. 6,70,35,657.00ற்கு ஒப்பம் ஏற்கப்பட்டு மன்றத்தீர்மான எண்.776/2015, நாள்.29.12.2015ன்படி மன்றத் தீர்மானம் பெறப்பட்டு 05.01.2016 அன்று பணி ஆணை வழங்கப்பட்டடது, தற்போது இந்த மருத்துவமனை கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது,

இப்பணிக்காக மதிப்பீடு தயாரிக்கும்பொழுது, 3047 சதுர மீட்டர் பரப்பளவில் தரைதளம் மற்றும் மூன்று தளங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டது, அதன் பின்னர் இந்த மருத்துவமனைக்கான இடம் அதிகமாக இருந்ததாலும், அந்த மருத்துவமனைக்கு தினசரி அதிகமான மக்கள் பயன்படுத்தி வருவதாலும், தரைதளம் மற்றும் அனைத்து தளங்களின் உபயோகத்தினை கருத்தில் கொண்டு 5053 சதுர மீட்டர் பரப்பளவில் கட்ட துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் கலந்தாய்வு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு வடிவமைப்பினை மாற்றி அமைத்து 18.02.2016 அன்று துணை ஆணையர் (சுகாதாரம்), மாநகர நல அலுவலர் மற்றும் கட்டடத்துறை பொறியாளர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது,

இப்பணிக்கு கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட இனங்களின் விவரம்,

1) பணி ஆணை வழங்கப்பட்ட பின் மருத்துவமனை கட்டப்படவுள்ள நிலப்பரப்பு கூடுதலாக இருந்ததால், அதற்கேற்ப கட்டடம் கட்ட அறிவுறுத்தப்பட்டதால், கூடுதல் கட்டுமான பணி மேற்கொள்ள இப்பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டில் உள்ள இனங்களை விட அதிகமான பணிகள் *(Deviation)* வேண்டியிருந்ததாலும்,

2) புதியதாக டயாலீஸ் பிரிவு தொடங்க அறிவுறுத்தப்பட்டதால், மதிப்பீடு தயாரிக்காத நிலையில் டயாலீஸ் பிரிவிற்காக தேவையான கூடுதல் பணிகள் வேண்டியிருந்ததாலும்,

3) தேசிய கட்டிடக் குறியீடில் (National Buildings code) தெரிவித்துள்ள விதிமுறைகளின்படி, இந்த மருத்துவமனைக்கு தேவையான கூடுதல் பணிகளான
   a) Fire Fighting System,
   b) Medical Gas,
   c) Sewage Treatment Plant for treatment of waste before disposal
   d) 500 and 1000 Ltr RO Plant
   e) 150000 லிட்டர் கொள்ளவு கொண்ட கீழ் நிலை தண்ணீர் தொட்டி (Water Sump)

   மேற்படி பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதால், அப்பணிகளுக்கு தேவையான கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டதும்,

4) அனைத்து ஜன்னல்களும் UPVC ஜன்னல்களாக மாற்றி அமைக்க வேண்டியிருந்ததாலும்,

5) வாகன நிறுத்தங்களில் *interlocking blocks* அமைக்கும் பணி வேண்டியிருந்ததாலும்,

6) 5 எண்ணிக்கையில் ஏர்கண்டிஷனர் பொருத்த வேண்டியிருந்ததாலும்,

மேற்குறிப்பிட்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள கூடுதல் பணிகளை மேற்கொண்டதால், ஒப்பத் தொகையை விட கூடுதலாக ஒப்பந்ததாரருக்கு 23.10% அதிகமாக பட்டி தீர்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது,

க.து.ந.க.எண்.பி11/1664/2015

கூடுதல் செலவீனத்தின் விவரங்கள்

அ) ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை	ரூ.6,70,35,657.00
ஆ)செய்து முடிக்கப்பட்ட பணிக்கான மொத்த தொகை	ரூ.8,25,19,174.14
இ) ஒப்ப தொகையை விட கூடுதல் செலவீனத்தொகை	ரூ.**1,54,83,517.00**
ஈ) ஒப்பத்தொகையைவிட கூடுதல் ஒப்ப சதவீதம்	23.10%

தமிழ்நாடு ஒளிவுமறைவில்லா ஒப்ப சட்டத்தின்படி (Tamilnadu Tender Transparency act 1998) ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்ப தொகைக்கு கூடுதலாக 25% மிகாமல் அதே ஒப்பந்ததாரரைக் கொண்டு பணிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், கூடுதல் ஒப்ப சதவீதம் 23.10 சதவீதம் உள்ளதால் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதல் பெற வேண்யுள்ளது.

எனவே,

1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.S.R.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களை கொண்டு கூடுதல் பணிகள் மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
2. கூடுதல் பணிகளுக்காக ஒப்பந்ததாருடன் கூடுதல் ஒப்பந்தம் (Supplementary Agreement) நிறைவேற்றவும்,
3. கூடுதல் ஒப்பந்தம் *(Supplementary Agreement)* நிறைவேற்றப்பட்ட பின்னர் ஒப்பந்ததாரருக்கு கூடுதல் பணி மேற்கொண்டமைக்கான தொகை ரூ. **1,54,83,517.00** ற்கான பட்டியை தீர்வு செய்வதற்கும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *26.08.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"*1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ப.து.ந.க.எண். *D1/SD/WDCN07/00032/2019*

தீர்மான எண்.490/2019 **நாள்:27-08-2019**

தானப்பத்திரம்

உறுப்பினர் / செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்கள் Old S.No.235/2 part & 3 part, 236/1 part, 2 & 3A part, present T.S.No.2 part & 3 part, Ward – I, Block No.68 of Padikuppam Village குடியிருப்பிற்கான மனைப்பிரிவு செய்ய வேண்டி திட்ட அனுமதி விண்ணப்பம் M/s. VGN Homes Private Limted, PoA on behalf of M/s. Gurusamy Naidu & Company Private Limited சமர்ப்பித்துள்ளதாகவும், அதனை கூர்ந்தாய்வு செய்து வளர்ச்சி விதிமுறைகளுக்கு உட்பட்டு திருத்தம் செய்யப்பட்டு, விண்ணப்பதாரர் வளர்ச்சி கட்டணம், கூர்ந்தாய்வு கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை செலுத்தியுள்ளதாக *08.01.2019* நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலை மற்றும் திறந்தவெளி பகுதிகள் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்.21.08.1984ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை மற்றும் திறந்தவெளி பகுதிகளை தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்க அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன் அடிப்பபடையில் M/s. VGN Homes Private Limted, PoA on behalf of M/s. Gurusamy Naidu & Company Private Limited அவர்களிடமிருந்து *7940* சதுர மீட்டர் நிலத்தை சாலைக்கெனவும், *1910* சதுர மீட்டர் திறந்தவெளி பகுதிக்காகவும் தானமாக பெற்று கொள்வதற்கு சிறப்பு அதிகாரி-மன்ற தீர்மான எண்.*259/2019*, நாள்.*18.05.2019*ன்படி மன்றத் தீர்மானம் பெறப்பட்டு, ஆணையர் அவர்களால் தானப்பத்திரத்தில் கையொப்பம் இடப்பட்டது.

இந்நிலையில் *08.07.2019* நாளிட்ட கடிதத்தில், முதன்மை செயலர் / உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களால் இவ் மனைபிரிவுக்கான திருத்தப்பட்ட வரைவு வரைபடம் அனுப்பப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள படி சாலைப்பகுதியான 8140 சதுர மீட்டர் நிலம் மற்றும் திறந்தவெளி ஒதுக்கிட்டு நிலத்திற்கான 1869 சதுர மீட்டர் நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்ளவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது,

எனவே, இவ்மனைப்பிரிவுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களால் *7940* சதுர மீட்டர் நிலத்தை சாலைக்கெனவும், *1910* சதுர மீட்டர் திறந்தவெளி பகுதிக்காகவும் தானமாக பெற்று கொள்வதற்கு தானப்பத்திரத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டதை ரத்து செய்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் திருத்தம் செய்யப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள *8140* சதுர மீட்டர் சாலை பகுதிக்கான நிலத்தையும் மற்றும் *1869* சதுர மீட்டர் திறந்தவெளி ஒதுக்கீட்டான நிலத்தையும் தானப்பத்திரம் மூலம் M/s. VGN Homes Private Limted, PoA on behalf of M/s. Gurusamy Naidu & Company Private Limited அவர்களிடமிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மேலும் M/s. VGN Homes Private Limted, PoA on behalf of M/s. Gurusamy Naidu & Company Private Limited அவர்கள் திருத்தப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை பகுதி மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு பகுதிகளை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

பதுநக.எண். *D1/SD/WDCN07/00032/2019*

மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை பகுதிகளில் சாலைகள் அமைக்க ஆகும் செலவினம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டும். சாலை மற்றும் தெரு விளக்கு ஆகியவை அமைக்க ஆகும் செலவினம் ரூபாய் 1,51,04,000/-

எனவே,

(1) Old S.No.235/2 part & 3 part, 236/1 part, 2 & 3A part, present T.S.No.2 part & 3 part, Ward – I, Block No.68 of Padikuppam Village என்கின்ற இடத்தில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் திருத்தப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் 8140 சதுர மீட்டர் நிலத்தை சாலைக்கெனவும், 1869 சதுர மீட்டர் நிலத்தை திறந்தவெளி பகுதியாகவும் (பூங்காவிற்கென) ஒதுக்கப்பட்டுள்ளதை M/s. VGN Homes Private Limted, PoA on behalf of M/s. Gurusamy Naidu & Company Private Limited யிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் சாலை பணி, மழைநீர் வடிகால் மற்றும் தெரு விளக்கு அமைக்கும் பணியினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ள M/s. VGN Homes Private Limited, PoA on behalf of M/s. Gurusamy Naidu & Company Private Limited அதற்கான கட்டணமாக ரூ. 1,51,04,000/-ஐ (ஒரு கோடியே ஐம்பத்தி ஒரு இலட்சத்து நான்காயிரம் மட்டும்) காசோலையாக வசூலிப்பதற்கும்,

(3) இவ்மனைப்பிரிவுக்கு எற்கனவே ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட ஆணையை ரத்து செய்வதற்கும் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட மனைப்பிரிவில் குறிப்பிட்டுள்ள சாலை பகுதி மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு பகுதிக்கான நிலங்களை தானமாக பெற்றுக் கொள்வதற்கும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *26.08.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"*1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ப.து.நக.எண்.*D1/SD/ WDCN07/116/2019*

தீர்மான எண்.491/2019 **நாள்:27-08-2019**

தானப்பத்திரம்

திரு B. Sekar அவர்கள் சர்வே எண். 428/1, 2 நகர புல எண். 8/1 & 8/5 பிளாக் எண்.10 அத்திபட்டு கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN07/00116/2019 நாள்: 06.03.2019ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள். 21.08.1984ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் திரு B.Sekar அவர்கள் மனைப்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ)திரு B. Sekar அவர்கள் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 7486.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 1092.66 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது., மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக 7.2 சதுர மீட்டர் அகலம் உள்ள ராம்பூர்ணா நகர் இரண்டாவது பிரதான சாலை அமைந்துள்ளது.

(ஆ)சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டத்தில் சர்வே எண்.*428* ல் தமனி சாலைக்காக *[Arterial Roads]* ஒதுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமனி சாலைக்காக *[Arterial Roads]* எவ்வளவு நிலம் ஒதுக்கப்படவேண்டும் என்று உறுப்பினர் - செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களை கேட்டுக் கொண்டதற்கு இணங்க முதன்மை செயலர் / உறுப்பினர் - செயலர் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்கள் கடிதம் எண்.C1/8857/2019 dated 28.06.2019 மூலம் தமனி சாலைக்காக *(Arterial Road)* ஒதுக்கப்பட வேண்டிய நிலத்தின் வரைபடம் அளித்துள்ளார். விண்ணப்பதாரர் அதற்கேற்றவாறு வரைபடம் திருத்தி சமர்ப்பித்துள்ளார். அதில் தமனி சாலைக்காக *(Arterial Road)* 3369.89 ச.மீ நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ)மனை உரிமையாளர் மனைக்கான பட்டாவினை, வட்டாட்சியர், அம்பத்தூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

(ஈ)விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. அனைத்து மனைகளும் 72ச.மீ பரப்பளவிற்கு குறையாமல் உள்ளது.

(உ)மனைப்பிரிவின் பரப்பளவு 3000 ச.மீ க்கு மேல் மற்றும் 10,000 ச.மீ க்கு கீழே இருப்பின் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீடு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடானா தொகையாகவோ செலுத்தலாம் என்று விதிகள் உள்ளது. திரு B. Sekar அவர்கள் இவ்விண்ணப்பத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையினை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ)Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் **1%** பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO - விற்கு மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். திரு B. Sekar அவர்கள் அதற்கேற்றவாறு 15.00ச.மீ பரப்பளவு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். அவ்வாறே 15.00ச.மீ பரப்பளவு M/s. TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(எ)மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அமைப்பதற்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணமாக விண்ணப்பதாரரிடம் இருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும், மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அபிவிருத்தி செய்ய தேவையான தொகை ரூ.17,20,000/- வசூலிக்கப்பட வேண்டும்.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் திரு B. Sekar அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும், சாலைக்கென ஒதுக்கப்பட்ட 1092.66 ச.மீ பரப்பளவு நிலமும், பொது பயன்பாட்டிற்காக 15.00 ச.மீ பரப்பளவு நிலத்தையும் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) புல எண். 428/1, 2 நகர புல எண். 8/1 & 8/5, பிளாக் எண்.10 அத்திபட்டு கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 1092.66 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான ஒதுக்கப்பட்டுள்ள 15.00 ச.மீ நிலத்தினையும் திரு B. Sekar அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான தொகை ரூ.17,20,000/-ஐ (ரூபாய் பதினேழு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மனை உரிமையாளரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ப.து.ந.க.எண்.டி1/006/2019

தீர்மான எண்.492/2019 **நாள்:27-08-2019**

தானப்பத்திரம்

மண்டலம்-6, கோட்டம்-64ல் திரு. ஆனந்த குமார், அவர்கள் மனை எண்.4, விவேக் நகர், கொளத்தூர், சென்னை - 600099 T.SNo.89, பிளாக் எண்.44, கொளத்தூர் கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10 ல் PPA/WDCN06/09005/2018 நாள்.22.12.2018ன்படி விண்ணப்பித்தார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக விவேக் நகர், அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி விவேக் நகர் 18.30மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 28.08ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

இக்கோப்பின் மீது தானப்பத்திரம் மூலம் 18.30ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானம் செய்ய சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.213/2019, நாள்.23.03.2019ன்படி மன்றத் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

சாலை விரிவாக்கம் செய்ய மனை உரிமையாளர்களிடமிருந்து தானமாக பெறவேண்டிய நிலம் 28.08 ச.மீ என்பதற்கு பதிலாக 18.30ச.மீ என்று தவறுதலாக ஆணையர் அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டு, ஆணை பெறப்பட்டு, மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் சாலை விரிவாக்கம் செய்ய மனை உரிமையாளர்களிடமிருந்து தானமாக பெறவேண்டிய நிலம் 28.08 ச.மீ ஆகும்.

எனவே,

(1) எனவே, புதிய எண்.3, பழைய எண்.4, விவேக் நகர், கொளத்தூர், சென்னை - 600099 T.SNo.89, பிளாக் எண்.44, கொளத்தூர் கிராமம் என்ற இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 28.08 ச.மீ நிலத்தினை மனை உரிமையாளர் திரு.ஆனந்த குமார் அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக்கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.50,000/- ஐ (ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்) மனை உரிமையாளர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

(3) இத்தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டட மன்றத் தீர்மானம் எண்.213/2019, நாள்.23.03.2019 க்கு திருத்திய தீர்மானம் ஆகும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ப.து.ந.க.எண்.டி.1/073/2019

தீர்மான எண்.493/2019 **நாள்:27-08-2019**

தானப்பத்திரம்

மண்டலம்-6, கோட்டம்-66ல் Mrs. Amsa Bai and Mrs. B. Reena, அவர்கள் கதவு எண்.14 (PT5A), (செல்லியம்மன் காலனி 2வது தெரு), பேப்பர் மில்ஸ் ரோடு, பெரவள்ளூர், சென்னை 600082, T.S.No.76/4, பிளாக் எண்.1, பெரவள்ளூர் கிராமம் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06ல் PPA/WDCN06/04016/2019 நாள். 21.06.2019ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக பேப்பர் மில்ஸ் ரோடு வடக்கு, அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி பேப்பர் மில்ஸ் ரோடு வடக்கு 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 9.59 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் Mrs. Amsa Bai and Mrs. B. Reena,, அவர்கள் கதவு எண்.14 (PT5A), (செல்லியம்மன் காலனி 2வது தெரு), பேப்பர் மில்ஸ் ரோடு, பெரவள்ளூர், சென்னை 600082 T.S.No.76/4,, பிளாக் எண்.1 பெரவள்ளூர் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய 9.59ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.17,100/- ஐ (ரூபாய் பதினேழாயிரத்து நூறு மட்டும்) மனை உரிமையாளர் Mrs. Amsa Bai and Mrs. B. Reena, அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ப.து.ந.க.எண்.டி.1/074/2019

தீர்மான எண்.494/2019 **நாள்:27-08-2019**

தானப்பத்திரம்

மண்டலம்-8, கோட்டம்-96ல் (1) Tmt. Daulal Kinish Rathi Huf rep by Karta Mr. Daulal Rathi (2) Thiru. Tanay Kumar Rathi (3) Tmt. Archana Rathi (4) Tanay Rathi Huf rep by Karta Mr. Tanay Kumar Rathi (5) Daulal Tanay Rathi Huf rep by Karta Mr. Daulal Rathi அவர்கள் கதவு எண்.79(27), கொன்னூர் நெடுஞ்சாலை, அயனாவரம், சென்னை-600023, T.S.No.42, பிளாக் எண்.34, அயனாவரம் கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8ல் PPA/WDCN08/03865/2019 நாள்.21.06.2019ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக கொன்னூர் நெடுஞ்சாலை அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி கொன்னூர் நெடுஞ்சாலை 30.50 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 97.76ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1)மனை உரிமையாளர் (1) Tmt. Daulal Kinish Rathi Huf rep by Karta Mr. Daulal Rathi (2) Thiru. Tanay Kumar Rathi (3) Tmt. Archana Rathi (4) Tanay Rathi Huf rep by Karta Mr. Tanay Kumar Rathi (5) Daulal Tanay Rathi Huf rep by Karta Mr. Daulal Rathi அவர்கள் கதவு எண்.79(27), கொன்னூர் நெடுஞ்சாலை, அயனாவரம், சென்னை-600023, T.S.No.42, பிளாக் எண்.34, அயனாவரம் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் 97.76ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.1,83,200/-ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பத்தி மூன்றாயிரத்து இருநூறு மட்டும்) மனை உரிமையாளர் (1) Tmt. Daulal Kinish Rathi Huf rep by Karta Mr. Daulal Rathi (2) Thiru. Tanay Kumar Rathi (3) Tmt. Archana Rathi (4) Tanay Rathi Huf rep by Karta Mr. Tanay Kumar Rathi (5) Daulal Tanay Rathi Huf rep by Karta Mr. Daulal Rathi அவர்களிடமிருந்து "ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1073-2/2019

தீர்மான எண்.495/2019 **நாள்:27-08-2019**

இயந்திரப்பொறியியல் துறை -மத்திய வட்டார பணிமனை - இரண்டாம் கட்டமாக - போக்குவரத்து காவல் துறை மூலம் பெறப்பட்ட - சாலையோரங்களில் நீண்ட நாட்களாக போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள கைவிடப்பட்ட இரண்டு/மூன்று/நான்கு சக்கர வாகனங்களை மற்றும் இரு சக்கர வாகனங்கள் 1300 எண்ணிக்கையில் ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய - 14.08.2019. அன்று திருவாளர்கள். M/s MSTC Ltd, (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனம் மூலம் மின்னணு ஏலம் நடத்தப்பட்டது - ஏலத்தில் உயர்ந்த விலை (ரூ.37,54,801/-) கோரிய திருவாளர்கள் M/s.A.K. Steel., நிறுவனத்திற்கு விற்பனை ஆணை வழங்கஅனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியின், எல்லைக்குட்பட்ட சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள கைவிடப்பட்ட வாகனங்களை, காவல் துறையின் உதவியுடன் அப்புறப்படுத்தபட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் வடக்கு/மத்தியம்/தெற்கு வட்டார இடங்களில் பெறப்பட்டு மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்யப்பட்டு வரப்படுகிறது. ஏற்கனவே, முதல் கட்டமாக வட்டார வாரியாக பெறப்பட்ட மொத்த 7875 வாகனங்கள் திருவாளர்கள். M/s MSTC Ltd, (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனம் மூலம் வட்டார வாரியாக **27.09.2018** அன்று மின்னணு ஏலம் விடப்பட்டு ஏலத்தில் கோரப்பட்ட அதிக தொகையான மொத்தம் **ரூ.2,63,92,417/-க்கு (GST 18% மற்றும் வருமான வரி 1% சோர்த்து)** விற்பனை செய்யப்பட்டு தீர்வு செய்யப்பட்டது.

தற்போது இரண்டாம் கட்டமாக காவல் துறை மூலம் சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்பட்டிருந்த யாரும் உரிமை கோராத இரண்டு/மூன்று/நான்கு சக்கர வாகனங்களை வட்டார வாரியாக பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு

வ. எண்	வட்டார அலுவலகம்	அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை
1.	வடக்கு வட்டாரம் (சூளை அவதான பாப்பையா ரோடு மற்றும் புதுப்பேட்டை அய்யாசாமி தெரு)	1100
2.	மத்திய வட்டாரம் (மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்)	1303
3.	தெற்கு வட்டாரம் (பள்ளிக்கரனை பழைய குப்பை கொட்டும் வளாகம்)	680 மற்றும் 12,740 Kg வாகன கழிவு குவியல்
	மொத்தம்	3083 மற்றும் 12,740 Kg வாகன கழிவு குவியல்

மேற்கண்ட வாகனங்களை மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்வதற்கும் மற்றும் துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் தலைமையில் கீழ்கண்ட உறுப்பினர்களை கொண்ட குழு அமைத்து மேற்கண்ட வாகனங்களுக்கான தொகையை மதிப்பீடு செய்யவும் ஆணையர் அவர்களின் 03.07.2019 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

1. துணை ஆணையர் (சுகாதாரம்) - தலைவர்
2. காவல் கூடுதல் துணை ஆணையர் (போக்குவரத்து திட்டம்) - உறுப்பினர்
3. தலைமை பொறியாளர் (இயந்திரம்/பாலங்கள்) - உறுப்பினர்
4. மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்/பாலங்கள்) - அமைப்பாளர்
5. செயற்பொறியாளர் (இ) (தலைமையிடம்) - உறுப்பினர்
6. செயற்பொறியாளர் -2 (இ) - உறுப்பினர்
7. செயற்பொறியாளர் (இ) (வடக்கு வாகன பணிமனை) - உறுப்பினர்
8. செயற்பொறியாளர் (இ) (மத்திய வாகன பணிமனை) - உறுப்பினர்
9. செயற்பொறியாளர் (இ) (தெற்கு வாகன பணிமனை) - உறுப்பினர்

மேலும், மேற்கண்ட வாகனங்கள் எந்த வழக்குகளுடனும் சம்பந்தப்படவில்லை அல்லது எந்தவொரு நீதிமன்ற நடவடிக்கையிலும் நிலுவையில் இல்லை என காவல்துறையின் மூலம் சான்று அளிக்கப்பட்ட பின், அவ்வாகனங்களின் பட்டியலை பெருநகர சென்னை மாநகராட்சி இணைய தளத்தில் வெளியிடப்பட்டது. அவ்வாறு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள வாகனத்தின் விவரத்தினை பொது மக்கள் பார்வையிட்டு அதன் அடிப்படையில் உரிமை கோரும் வாகனத்தின் உரிமையாளர்கள் சம்மந்தப்பட்ட காவல் துறையினை 15 நாட்களுக்குள் அணுகுமாறு கோரும் பிரசுரம் தினசரி நாளிதழ்களில் வெளியிடப்பட்டு 2 வாகனங்கள் மத்திய வட்டாரத்திலிருந்து (மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்) திரும்ப ஒப்படைத்த பின், **16.07.2019** அன்று தொழில் நுட்ப குழு ஒவ்வொரு வட்டார வாரியாக உள்ள வாகனங்களை தற்போது இருக்கும் நிலையை ஆய்வு செய்து மதிப்பீட்டு தொகையை நிர்ணயம் செய்யப்பட்டது. அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட பின் மத்திய வட்டாரத்தில் ஒரு மூன்று சக்கர வாகனம் மற்றும் தெற்கு வட்டாரத்தில் ஒரு இரு சக்கர வாகனம் ஆக மொத்தம் 2 வாகனங்கள் நீதிமன்ற வழக்கில் உள்ளதாக காவல் துறை ஆய்வாளர்கள் வேண்டுகோளுக்கு இணங்க திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இறுதியாக உள்ள வாகனங்களுக்கு தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பீடு தொகை விவரம் கீழ்வருமாறு.

வ. எண்	வாகன வகை	வடக்கு வட்டாரம்		மத்திய வட்டாரம்		தெற்கு வட்டாரம்	
		எண்ணிக்கை	மதிப்பீட்டு தொகை ரூ.	எண்ணிக்கை	மதிப்பீட்டு தொகை ரூ.	எண்ணிக்கை	மதிப்பீட்டு தொகை ரூ.
1.	இரு சக்கர வாகனம்	1042	18,92,450	1239	23,49,900	647	11,94,350
2.	மூன்று சக்கர வாகனம்	25	1,76,550	30	2,10,000	29	1,07,650
3.	நான்கு சக்கர வாகனம்	33	9,56,500	31	7,63,500	3	45,000
						12,740 Kg வாகன கழிவுகள்	89,180
	மொத்தம்	1100	30,25,500	1300	33,23,400	679	14,36,180

சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மானம் எண்.**898/2018**, நாள்.**08.11.2018**ல், எதிர்வரும் 5 ஆண்டு காலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பயன்படுத்தி கழிவு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் இதர பொருட்களை விற்பனை செய்ய திருவாளர்கள். M/s MSTC Ltd, (மத்திய அரசு நிறுவனம்) மூலம் மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்யலாம் என ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வாகனத் தொகுப்புகளை வட்டார வாரியாக மின்னணு ஏலம் நடத்த முடிவு செய்யப்பட்டு, மத்திய வட்டாரத்தில் உள்ள **1300** எண்ணிக்கையில் கைவிடப்பட்ட வாகனங்கள் ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி விற்பனை செய்ய **14.08.2019** அன்று நடத்தும்படி 01.08.2019 நாளிட்ட கடிதத்தில் திருவாளர்கள். M/s MSTC Ltd, (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனத்தாரை கேட்டுகொள்ளப்பட்டது.

அதன்படி **1300** கைவிடப்பட்ட வாகனங்கள் மட்டும் விற்பனை செய்ய **14.08.2019** அன்று நடைபெற்ற மின்னணு ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய நிறுவனத்தின் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	விவரம்	தொழில்நுட்ப குழு மதிப்பீடு செய்த தொகை	மின்னணு ஏலத்தில் கோரிய உயர்ந்த விலை	உயர்ந்த விலை கோரியுள்ள ஏலத்தாரர்
1	மத்திய வட்டார பணிமனையின் கீழ் இரண்டாம் கட்டமாக பெறப்பட்ட **1300** எண்கள் கைவிடப்பட்ட இரண்டு/மூன்று/ நான்குசக்கரவாகனங்களைஒரே தொகுப்பாக விற்பனை செய்தல்	**ரூ. 33,23,400/-**	**ரூ. 37,54,801/-**	**M/s. A.K. Steel.,**

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1073-2/2019

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் அடிப்படையில் மத்திய வட்டார பணிமனையின், கீழ் இரண்டாம் கட்டமாக பெறப்பட்ட 1300 எண்ணிக்கையிலான கைவிடப்பட்ட இரண்டு/மூன்று/நான்கு சக்கர வாகனங்கள் ஆகியவை விற்பனை செய்ய நடத்தப்பட்ட மின்னணு ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் M/s. A.K. Steel., அவர்களின் விலையான ரூ. 37,54,801/- தொழில்நுட்பகுழு நிர்ணயித்த மதிப்பீட்டு (ரூ.33,23,400/-) தொகையுடன் ஒப்பிடும்போது (+) 12.98% கூடுதலாகும். ஆதலால் ஏலத்தில் அதிக தொகை கோரியுள்ள M/s. A.K. Steel., நிறுவனத்தார்க்கு மேற்கண்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும், மின்னணு ஏலத்தில் அதிக விலை கோரியுள்ள திருவாளர்கள். M/s. A.K. Steel., நிறுவனம் அளித்த விலைப்புள்ளி ரூ.37,54,801/-யில் 25% பாதுகாப்பு தொகையாக ரூ.9,38,700/யை (DD.No.011368/19-Aug-2019 drawn on FEDERAL BANK i/f of Commissioner COC) மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனம் பெற்றுக் கொண்டதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் உறுதிப்படுத்தல் கடிதம் கிடைத்த உடன் ஏலதாரரிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ.9,38,700/யை மாநகராட்சிக்கு RTGS மூலம் அனுப்பி வைக்கப்படும் எனவும் திருவாளர்கள். MSTC Ltd., (மத்திய அரசு நிறுவனம்) தங்கள் மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளனர்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார பணிமனையின் கீழ் இரண்டாம் கட்டமாக காவல் துறை மூலம் பெறப்பட்ட சாலைகளின் போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்பட்டு இருந்த யாரும் உரிமை கோராத கீழ்கண்ட வாகனங்களை உள்ளது உள்ளபடி விற்பனை செய்ய திருவாளர்கள். MSTC Ltd., (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனம் மூலம் **14.08.2019** அன்று நடத்தப்பட்ட மின்னணு ஏலத்தில் திருவாளர்கள். **M/s. A.K. Steel.,** அவர்கள் கோரியுள்ள உயர்ந்த விலை ரூ. **37,54,801/- (Thirty Seven Lakhs Fifty Four Thousand Eight Hundred and One Only)** .விலையானது தொழில்நுட்பகுழு நிர்ணயித்த மதிப்பீட்டு தொகையுடன் **ரூ.33,23,400/- (Thirty Three lakhs Twenty three Thousand Four Hundred Only)** ஒப்பிடும்போது (+) **12.98%** கூடுதலாக இருப்பதால் ஏற்று திருவாளர்கள். **M/s. A.K. Steel.,** நிறுவனத்தார்க்கு விற்பனை ஆணை வழங்கவும்,

வ. எண்	வாகன வகை	மொத்த வாகனங்கள்	தொழில் நுட்ப குழு நிர்ணயித்த மதிப்பு	கோரிய உயர்ந்த விலை (GST மற்றும் IT தவிர்த்து)	ஏலதாரர் பெயர்
1	இரு சக்கர வாகனம்	1239	**ரூ. 33,23,400/-**	**ரூ. 37,54,801/-**	**M/s. A.K. Steel.,**
2	மூன்று சக்கர வாகனம்	30			
3	நான்கு சக்கர வாகனம்	31			
	மொத்தம்	1300			

2. மேற்கண்ட வாகனங்களை விற்பனை செய்யும் பொருட்டு நடைபெற்ற மின்னணு ஏலத்தில் அதிக விலையாக **ரூ. 37,54,801/- (Thirty Seven Lakhs Fifty Four Thousand Eight Hundred and One Only)** கோரியுள்ள திருவாளர்கள். **M/s. A.K. Steel.,** நிறுவனத்தாரிடமிருந்து மொத்த ஏலத்தொகையுடன் **GST 18% ரூ.6,75,864/-(Six Lakh Seventy five thousand eight Hundred and sixty four Only)**, வருமான வரி 1% **ரூ.44,307/- (Forty four thousand three Hundred seven only)** ஆக மொத்தம் தொகையான **ரூ. 44,74,972/- (Forty Four Lakhs Seventy four**

thousand Nine hundred and Seventy two Only) அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமலிலுள்ள வரி தொகைக்கு ஏற்ப இறுதி தொகையினை திருவாளர்கள். *MSTC Ltd.*, (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனத்தின் மூலம் பெற்று பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய பின் வாகனங்களை உள்ளது உள்ளபடி நிலையில் எடுத்து செல்ல திருவாளர்கள். ***M/s. A.K. Steel***., அவர்களுக்கு அனுமதி வழங்கிடவும்.

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *27.08.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"*1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 1073-3/ 2019

தீர்மான எண்.496 / 2019 **நாள்:27-08-2019**

இயந்திரப்பொறியியல் துறை -தெற்கு வட்டார பணிமனை - இரண்டாம் கட்டமாக - போக்குவரத்து காவல் துறை மூலம் பெறப்பட்ட - சாலையோரங்களில் நீண்ட நாட்களாக போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள கைவிடப்பட்ட இரண்டு/மூன்று/நான்கு சக்கர வாகனங்களை மற்றும் இரு சக்கர வாகனங்கள் 679 எண்ணிக்கையில் மற்றும் வாகன கழிவு குவியல் 12,740 Kg ஓரே தொகுப்பாக விற்பனை செய்ய - 14.08.2019. அன்று திருவாளர்கள். M/s MSTC Ltd, (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனம் மூலம் மின்னணு ஏலம் நடத்தப்பட்டது - ஏலத்தில் உயர்ந்த விலை (ரூ.21,74,901/-) கோரிய திருவாளர்கள் M/s.A.K. Steel., நிறுவனத்திற்கு விற்பனை ஆணை வழங்கஅனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியின், எல்லைக்குட்பட்ட சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள கைவிடப்பட்ட வாகனங்களை, காவல் துறையின் உதவியுடன் அப்புறப்படுத்தபட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் வடக்கு/மத்தியம்/தெற்கு வட்டார இடங்களில் பெறப்பட்டு மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்யப்பட்டு வரப்படுகிறது. ஏற்கனவே, முதல் கட்டமாக வட்டார வாரியாக பெறப்பட்ட மொத்த 7875 வாகனங்கள் திருவாளர்கள். M/s MSTC Ltd, (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனம் மூலம் வட்டார வாரியாக **27.09.2018** அன்று மின்னணு ஏலம் விடப்பட்டு ஏலத்தில் கோரப்பட்ட அதிக தொகையான மொத்தம் **ரூ.2,63,92,417/-க்கு (GST 18% மற்றும் வருமான வரி 1% சேர்த்து)** விற்பனை செய்யப்பட்டு தீர்வு செய்யப்பட்டது.

தற்போது இரண்டாம் கட்டமாக காவல் துறை மூலம் சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்பட்டிருந்த யாரும் உரிமை கோராத இரண்டு/மூன்று/நான்கு சக்கர வாகனங்களை வட்டார வாரியாக பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு

வ. எண்	வட்டார அலுவலகம்	அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை
1.	வடக்கு வட்டாரம் (சூளை அவதான பாப்பையா ரோடு மற்றும் புதுப்பேட்டை அய்யாசாமி தெரு)	1100
2.	மத்திய வட்டாரம் (மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்)	1303
3.	தெற்கு வட்டாரம் (பள்ளிக்கரனை பழைய குப்பை கொட்டும் வளாகம்)	680 மற்றும் 12,740 Kg வாகன கழிவு குவியல்
	மொத்தம்	3083 மற்றும் 12,740 Kg வாகன கழிவு குவியல்

மேற்கண்ட வாகனங்களை மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்வதற்கும் மற்றும் துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் தலைமையில் கீழ்கண்ட உறுப்பினர்களை கொண்ட குழு அமைத்து மேற்கண்ட வாகனங்களுக்கான தொகையை மதிப்பீடு செய்யவும் ஆணையர் அவர்களளின் 03.07.2019 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

1. துணை ஆணையர் (சுகாதாரம்) - தலைவர்
2. காவல் கூடுதல் துணை ஆணையர் (போக்குவரத்து திட்டம்) - உறுப்பினர்
3. தலைமை பொறியாளர் (இயந்திரம்/பாலங்கள்) - உறுப்பினர்
4. மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்/பாலங்கள்) - அமைப்பாளர்
5. செயற்பொறியாளர் (இ) (தலைமையிடம்) - உறுப்பினர்
6. செயற்பொறியாளர் -2 (இ) - உறுப்பினர்
7. செயற்பொறியாளர் (இ) (வடக்கு வாகன பணிமனை) - உறுப்பினர்
8. செயற்பொறியாளர் (இ) (மத்திய வாகன பணிமனை) - உறுப்பினர்
9. செயற்பொறியாளர் (இ) (தெற்கு வாகன பணிமனை) - உறுப்பினர்

மேலும், மேற்கண்ட வாகனங்கள் எந்த வழக்குகளுடனும் சம்பந்தப்படவில்லை அல்லது எந்தவொரு நீதிமன்ற நடவடிக்கையிலும் நிலுவையில் இல்லை என காவல்துறையின் மூலம் சான்று அளிக்கப்பட்ட பின், அவ்வாகனங்களின் பட்டியலை பெருநகர சென்னை மாநகராட்சி இணைய தளத்தில் வெளியிடப்பட்டது. அவ்வாறு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள வாகனத்தின் விவரத்தினை பொது மக்கள் பார்வையிட்டு அதன் அடிப்படையில் உரிமை கோரும் வாகனத்தின் உரிமையாளர்கள் சம்மந்தப்பட்ட காவல் துறையினை 15 நாட்களுக்குள் அணுகுமாறு கோரும் பிரசுரம் தினசரி நாளிதழ்களில் வெளியிடப்பட்டு 2 வாகனங்கள் மத்திய வட்டாரத்திலிருந்து (மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்) திரும்ப ஒப்படைத்த பின், **16.07.2019** அன்று தொழில் நுட்ப குழு ஒவ்வொரு வட்டார வாரியாக உள்ள வாகனங்களை தற்போது இருக்கும் நிலையை ஆய்வு செய்து மதிப்பீட்டு தொகையை நிர்ணயம் செய்யப்பட்டது. அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட பின் மத்திய வட்டாரத்தில் ஒரு மூன்று சக்கர வாகனம் மற்றும் தெற்கு வட்டாரத்தில் ஒரு இரு சக்கர வாகனம் ஆக மொத்தம் 2 வாகனங்கள் நீதிமன்ற வழக்கில் உள்ளதாக காவல் துறை ஆய்வாளர்கள் வேண்டுகோளுக்கு இணங்க திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இறுதியாக உள்ள வாகனங்களுக்கு தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பீடு தொகை விவரம் கீழ்வருமாறு.

வ. எண்	வாகன வகை	வடக்கு வட்டாரம்		மத்திய வட்டாரம்		தெற்கு வட்டாரம்	
		எண்ணிக்கை	மதிப்பீட்டு தொகை ரூ.	எண்ணிக்கை	மதிப்பீட்டு தொகை ரூ.	எண்ணிக்கை	மதிப்பீட்டு தொகை ரூ.
1.	இரு சக்கர வாகனம்	1042	18,92,450	1239	23,49,900	647	11,94,350
2.	மூன்று சக்கர வாகனம்	25	1,76,550	30	2,10,000	29	1,07,650
3.	நான்கு சக்கர வாகனம்	33	9,56,500	31	7,63,500	3	45,000
						12,740 Kg வாகன கழிவுகள்	89,180
	மொத்தம்	1100	30,25,500	1300	33,23,400	679	14,36,180

சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மானம் எண்.898/2018, நாள்.08.11.2018ல், எதிர்வரும் 5 ஆண்டு காலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பயன்படுத்தி கழிவு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் இதர பொருட்களை விற்பனை செய்ய திருவாளர்கள். M/s MSTC Ltd, (மத்திய அரசு நிறுவனம்) மூலம் மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்யலாம் என ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வாகனத் தொகுப்புகளை வட்டார வாரியாக மின்னணு ஏலம் நடத்த முடிவு செய்யப்பட்டு, தெற்கு வட்டாரத்தில் உள்ள 679 கைவிடப்பட்ட வாகனங்கள் மற்றும் 12,740 Kg வாகன கழிவு குவியல் ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி விற்பனை செய்ய 14.08.2019 அன்று நடத்தும்படி 01.08.2019 நாளிட்ட கடிதத்தில் திருவாளர்கள். M/s MSTC Ltd, (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனத்தாரை கேட்டுகொள்ளப்பட்டது.

அதன்படி 679 கைவிடப்பட்ட வாகனங்கள் மற்றும் வாகன கழிவு குவியல் 12,740 Kg மட்டும் விற்பனை செய்ய 14.08.2019 அன்று நடைபெற்ற மின்னணு ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய நிறுவனத்தின் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	விவரம்	தொழில்நுட்ப குழு மதிப்பீடு செய்த தொகை	மின்னணு ஏலத்தில் கோரிய உயர்ந்த விலை	உயர்ந்த விலை கோரியுள்ள ஏலத்தாரர்
1	தெற்கு வட்டார பணிமனையின் கீழ் இரண்டாம் கட்டமாக பெறப்பட்ட **679** எண்கள் கைவிடப்பட்ட இரண்டு / மூன்று / நான்குசக்கரவாகனங்களை மற்றும் **12,740Kg** வாகன கழிவு குவியல் கொண்ட ஒரே தொகுப்பாக விற்பனை செய்தல்	**ரூ. 14,36,180/-**	**ரூ. 21,74,901/-**	**M/s. A.K. Steel.,**

இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 1073-3/ 2019

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் அடிப்படையில் தெற்கு வட்டார பணிமனையின், கீழ் இரண்டாம் கட்டமாக பெறப்பட்ட 679 எண்ணிக்கையிலான கைவிடப்பட்ட இரண்டு/மூன்று/நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 12,740 Kg வாகன கழிவு குவியல் ஆகியவை விற்பனை செய்ய நடத்தப்பட்ட மின்னணு ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் M/s. A.K. Steel., அவர்களின் விலையான **ரூ.21,74,901/-** தொழில்நுட்பகுழு நிர்ணயித்த மதிப்பீட்டு **(ரூ.14,36,180/-)** தொகையுடன் ஒப்பிடும்போது **(+) 51.44%** கூடுதலாகும். ஆதலால் ஏலத்தில் அதிக தொகை கோரியுள்ள M/s. A.K. Steel., நிறுவனத்தாருக்கு மேற்கண்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும், மின்னணு ஏலத்தில் அதிக விலை கோரியுள்ள திருவாளர்கள். M/s. A.K. Steel., நிறுவனம் அளித்த விலைப்புள்ளி ரூ.21,74,901/-யில் 25% பாதுகாப்பு தொகையாக ரூ.5,43,725/யை (DD.No.011369/19-Aug-2019 drawn on FEDERAL BANK i/f of Commissioner COC) மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனம் பெற்றுக் கொண்டதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் உறுதிப்படுத்தல் கடிதம் கிடைத்த உடன் ஏலதாரரிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ.5,43,725/யை மாநகராட்சிக்கு RTGS மூலம் அனுப்பி வைக்கப்படும் எனவும் திருவாளர்கள். MSTC Ltd., (மத்திய அரசு நிறுவனம்) தங்கள் மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளனர்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, தெற்கு வட்டார பணிமனையின் கீழ் இரண்டாம் கட்டமாக காவல் துறை மூலம் பெறப்பட்ட சாலைகளின் போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்பட்டு இருந்த யாரும் உரிமை கோராத கீழ்கண்ட வாகனங்களை உள்ளது உள்ளபடி விற்பனை செய்ய திருவாளர்கள். MSTC Ltd., (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனம் மூலம் 14.08.2019 அன்று நடத்தப்பட்ட மின்னணு ஏலத்தில் திருவாளர்கள். M/s. A.K. Steel., அவர்கள் கோரியுள்ள உயர்ந்த விலை ரூ.21,74,901/- (Twenty One Lakhs Seventy Four Thousand Nine Hundred and One Only) விலையானது தொழில்நுட்பகுழு நிர்ணயித்த மதிப்பீட்டு தொகையுடன் ரூ.14,36,180/- (Fourteen lakhs Thirty Six Thousand One Hundred and Eighty Only) ஒப்பிடும்போது (+) 51.44% கூடுதலாக இருப்பதால் ஏற்று திருவாளர்கள். M/s. A.K. Steel., நிறுவனத்தாருக்கு விற்பனை ஆணை வழங்கவும்,

வ. எண்	வாகன வகை	மொத்த வாகனங்கள்	தொழில் நுட்ப குழு நிர்ணயித்த மதிப்பு	கோரிய உயர்ந்த விலை (GST மற்றும் IT தவிர்த்து)	ஏலதாரர் பெயர்
1	இரு சக்கர வாகனம்	647	**ரூ. 14,36,180/-**	**ரூ. 21,74,901/-**	**M/s. A.K. Steel.,**
2	மூன்று சக்கர வாகனம்	29			
3	நான்கு சக்கர வாகனம்	3			
	மொத்தம்	**679** மற்றும் **12,740 Kg** வாகன கழிவு குவியல்			

2. மேற்கண்ட வாகனங்களை விற்பனை செய்யும் பொருட்டு நடைபெற்ற மின்னணு ஏலத்தில் அதிக விலையாக ரூ.21,74,901/- (Twenty One Lakhs Seventy Four Thousand Nine Hundred and One Only) கோரியுள்ள திருவாளர்கள். M/s. A.K. Steel., நிறுவனத்தாரிடமிருந்து மொத்த ஏலத்தொகையுடன் GST 18% ரூ.3,91,482/-(Three Lakh Ninety One thousand Four Hundred and eighty two Only) வருமான வரி 1% ரூ.25,664/- (Twenty Five thousand Six Hundred and Sixty four only) ஆக மொத்தம் தொகையான ரூ.25,92,047/- (Twenty Five Lakhs

Ninety two thousand Fourty Seven Only) அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமலிலுள்ள வரி தொகைக்கு ஏற்ப இறுதி தொகையினை திருவாளர்கள். *MSTC Ltd.,* (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனத்தின் மூலம் பெற்று பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய பின் வாகனங்களை உள்ளது உள்ளபடி நிலையில் எடுத்து செல்ல திருவாளர்கள். *M/s. A.K. Steel.,* அவர்களுக்கு அனுமதி வழங்கிடவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *27.08.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது,

"*1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.ஈ1/23590/2019

தீர்மான எண்.497/2019 **நாள்:28-08-2019**

பொதுத்துறை - திரு. எல்.ஸ்ரீதரன், செயற்பொறியாளர் , மத்திய வட்டார அலுவலகம் அவர்கள்- 31.08.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.

துணை ஆணையர் (மத்தியம்) அவர்களின் 21.08.2019 நாளிட்ட கடிதத்தில், உதவி ஆணையர்(பொ.நி.ம.ப) அவர்களின் 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில், மத்திய வட்டார அலுவலகத்தில் செயற்பொறியாளராக பணிபுரியும் திரு.எல்.ஸ்ரீதரன் அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக 31.08.2019 அன்று பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தனியரின் பிறந்த தேதி 18.08.1961 ஆகும்.

திரு.எல்.ஸ்ரீதரன், செயற்பொறியாளர் மத்திய வட்டாரம் அலுவலகம் அவர்கள் முதல் முதலாக பெருநகர சென்னை மாநகராட்சியில் 13.08.1993 முதல் உதவி பொறியாளராக தொகுப்பூதிய அடிப்படையில் பணியில் சேர்ந்தார். 12.05.1995 முதல் காலமுறை ஊதியத்தில் பணியில் ஈர்த்துக்கொள்ளப்பட்டார். 12.05.1997 அன்று தகுதிகாண் முடித்தவராகவும், 20.12.2010 முதல் உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அரசாணை எண்.177 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள்.16.03.2015ன்படி, மேற்கண்ட தொகுப்பூதிய காலத்தினை (1993-1995) பணப்பயனின்றி காலமுறை ஊதிய பணிக்காலமாக நிர்ணயிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட அரசாணையின்படி தனியரின் பணிக்காலம் நிர்ணயிக்கப்பட்டதால், 08.02.2010 முதல் கருத்தியலாக உதவி செயற்பொறியாளராகவும், 26.10.2016 முதல் செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று, மத்திய வட்டார அலுவலகத்தில் பணிபுரிந்து வருகின்றார்.

தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் இந்நாள் வரை பணியாற்றிய துறை/வட்டார மண்டலங்களில் பணியாற்றிய விவரங்கள் பின்வருமாறு.

வ. எண்.	பதவி	மண்டலம்/துறைகள்	பணியாற்றிய காலம்	
			முதல்	வரை
1.	உதவி பொறியாளர்	இயந்திர பொறியியல் துறை	13.08.1993	20.12.2010
2	உதவி செயற்பொறியாளர்	மண்டலம் 6 (பணிமாற்று அடிப்படையில் இயந்திர பொறியியல் துறை)	21.12.2010	15.04.2012
3		இயந்திர பொறியியல் துறை	15.04.2012	27.01.2014
4		மத்திய வட்டார அலுவலகம்	28.01.2014	12.09.2016
5		மண்டலம் 6	13.09.2016	25.10.2016
6	செயற்பொறியாளர்	மத்திய வட்டார அலுவலகம்	26.10.2016	இந்நாள் வரை

மேற்கண்ட அட்டவணையின்படி தனியர் பணிபுரிந்துள்ள துறை / மண்டலங்களில் பெறப்பட்ட விவரங்களின்படி, தனியர் மீது தணிக்கை தடைகள் , ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவைகள் ஏதும் இல்லையென தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்க 26.02.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என சான்று அளிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களது 19.03.2019 நாளிட்ட கடிதத்தின்படி தனியர் உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளராக துறை/மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 1999-2000 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த

பொ.து.ந.க.எண்.ஈ1/23590/2019

பத்திகள் இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கையின் படி நிலுவை ஏதுமில்லை எனவும், மேலும் 2017-2018 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரைக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் வெளியிடப்படவில்லை . மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும்.

மேலும், தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் ஓய்வு பெறும் நாள் வரை தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவை ஏதுமில்லை என்பதற்கான சான்றும் மற்றும் உதவி செயற்பொறியாளர் பதவியில் தனியரால் பெறப்பட்ட முன்பணத் தொகைகளுக்கான விவரங்களை பகுதி கணக்கு குழுமத்தில் பெற்று அத்தொகைகள் அனைத்தும் நேர்செய்யப்பட்டு, தனியரை பொறுப்பாக்கும் முன்பணத்தொகை ஏதும் நிலுவையில் இல்லை என்பதற்கான சான்று துறை/மண்டல அலுவலரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர், விழிப்பு துறையிலிருந்தும் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரம் 31.07.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பெறப்பட்டுள்ளது.

தனியரது 21.08.2019 நாளிட்ட உறுதிமொழி கடிதத்தின்படி, தனியர் ஓய்வு பெற்ற பின்னர் அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கால பணப்பயன்களான ஓய்வூதியம் மற்றும் துறை வழி பணப்பயன்கள் மிகையாக இருப்பது பின்னர் தெரியவந்தால் அத்தொகையினை ஓரே தவணையில் செலுத்திவிடுவதாகவும் அல்லது தனக்கு வழங்கப்படும் ஓய்வூதிய அகவிலைப்படியில் இருந்து பிடித்தம் செய்துகொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

செயற்பொறியாளர், பதவியானது வகுப்பு-2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவியில் வகிப்பவரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, நிதி ஆலோசகர் அவர்களின் கடிதத்தின்படி, திரு.எல்.ஸ்ரீதரன், செயற்பொறியாளர் மத்திய வட்டார அலுவகம் அவர்களின் மீது 2017-2018 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையால் வெளியிடப்படவில்லை என்பதால், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத்தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியரை முழுபொறுப்பாக்கி, அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 31.08.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 27.08.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"வயது முதிர்வு ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

S.W.M.C.No.A7/1406/2019

Resolution No.498/2019 **Date:28-08-2019**

Solid Waste Management Department – Notification issued by the Ministry of Environment, Forest & Climate Change, New Delhi, dated:18.03.2016 – Modified Plastic Waste Management By Law 2019 – For approval.

The Special officer, Council has approved the Plastic Waste Management By-Laws, 2016 vide Resolution No 638/2017, dated: 27.09.2017.

As per G.O.(MS).No.84 Environment an Forests (EC.2) Department, dated 25.06.2018, the Commissioner Greater Chennai Corporation, shall enforce the direction of "one time use and throw away plastic ban" in exercise of power conferred on him/her by law in their jurisdiction. The notification came into effect from 1st January 2019.

The Deputy Secretary to Government, Municipal Administration and Water Supply (MA.IV) Department in his letter dated.12.04.2019, has mentioned that "The Government of Tamil Nadu has notified the ban on one-time use and throwaway plastics irrespective of thickness with effect from 01.01.2019 under Environmental (protection) Act 1986 and a Steering Committee under the Chairmanship of Chief Secretary to Government for monitoring the implementation of ban has been constitutes.

The ban on "one time use and throw away plastic ban" thickness and the provision for levying penalty have to be incorporated in the Plastic Waste Management By-Laws 2019. Hence, the Plastic Waste Management By-Laws 2019 has been modified and submitted for approval.

Hence,

1. To approve the Plastic Waste Management By-Laws, 2019.
2. To approve the Plastic Waste Management By-Laws, 2019 in the local Newspaper both English and Tamil.
3. To keep printed copies of the Plastic Waste Management By-Laws, 2019 in all the Zonal Officer 1 to 15, RDC (North, Central and South) offices and at the Solid Waste Management Department, Had Quarter for public inspection and all persons be permitted to peruse the same at any reasonable time frees of charge and also to upload in GCC website.
4. For sale of the printed copies of the draft plastic waste management by-laws 2019 on demand for an amount of Rs.100/- (Rupees one hundred only) for 30 pages.

Sl.No. 1 to 4 above, Orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.08.08.2019 is read.

"Plastic Waste Management By-Law 2019, Sl.No. 1 to 4 are approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."

****

S.W.M.C.No.A4/ 2246/2019

Resolution No.499/2019 **Date:28-08-2019**

Solid Waste Management Department – Construction and Demolition Waste Management on Trial basis - request from M/s.Bioneer Greenenergy to install Rubble Master - granting permission subject to certain conditions – For approval.

In Greater Chennai Corporation, the total quantum of Construction and Demolition Waste generation is around 2000 TPD and around 1000 TPD is being dumped in Kodungaiyur and Perungudi dumping ground. The remaining Construction and Demolition Waste is being reused for filling up of low lying lands. In order to process Construction and Demolition Waste, Greater Chennai Corporation is in search of novelty processing methods. In the course of search, M/s Bioneer Greenenergy approached Greater Chennai Corporation and informed about a machine that can handle around 500 TPD and can convert the construction and Demolition Waste into 50mm, 25mm and 6mm size particles, which have reuse value in market. The presentation shows that this machine is an apt one and is the need of the hour for Greater Chennai Corporation to process C & D waste without any cost.

During discussions, they have requested to give permission to install this Rubble Master 70GO! 0.2 on trail basis in Kodungaiyur dumping ground for a short period of 45 days subject to certain terms and conditions and analyse the feasibility of it as a solution for C&D waste processing.

Hence, to permit M/s.Bioneer Greenenergy to install Rubble Master 70GO! 0.2 in Kodungaiyur Dumping Ground on trial basis subject to the following conditions;

1. Greater Chennai Corporation shall provide land temporarily for installing Rubble Master 70GO! 0.2 Machine in Kodungaiyur Dumping Ground and the ownership of the land lies with GCC.
2. Supplying, erecting and O&M of Rubble Master 70GO! 0.2 Machine in Kodungaiyur Dumping Ground shall be carried out by M/s.Bioneer Greenenergy on their own expenses for a period of 45 days on trial basis.
3. Greater Chennai Corporation will supply around 300 - 500 MT of C&D Waste per day to M/s.Bioneer Greenenergy for processing which is collected from various zones.
4. The By-Products produced can be taken by M/s.Bioneer Greenenergy and the revenue can be utilized for O&M of the machine.
5. M/s.Bioneer Green energy shall obtain consent from Tamil Nadu Pollution Control Board (TNPCB) before installing Rubble Master 70GO! 0.2 Machine in Kodungaiyur Dumping Ground.
6. The whole process of C&D waste management by Rubble Master 70GO! 0.2 Machine shall comply the norms of TNPCB.

7. The safety of the workers and machineries/equipments is the sole responsibility of M/s.Bioneer Greenenergy.
8. The Greater Chennai Corporation has full rights to take back the land or cancel this order at any point of time in view of any breach in complying the conditions with one week of prior intimation in writing.
9. Daily reports of quantity of C&D waste processed, products produced and sold shall be furnished to Superintending Engineer (SWM) of Greater Chennai Corporation by M/s Bioneer Greenenergy.

Orders of the Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.14.08.2019 is read.

"Installation of Rubble Master, Sl.No. 1 to 9 are approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."

****

பொ.து.ந.க.எண்.இ7/15368/2019

தீர்மான எண்.500 / 2019 **நாள்:28-08-2019**

பணியமைப்பு-பெருநகர சென்னை மாநகராட்சி- பொதுத்துறை - மண்டலம்-14, கோட்டம்-185 பாலவாக்கம் குப்பம் டெங்கு பாதிப்பு ஏற்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் கொசுப்புழு இருப்பதும், கொசுப்புழு உற்பத்தியாக கூடிய தேவையற்ற பொருட்களை அகற்றாமல் இருந்தது- திரு. மலைராஜா சுகாதார ஆய்வாளர் ,கோட்டம்-185 என்பவர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4 ஆம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983 ஆம் ஆண்டு துணை விதி 9(1) இன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி விளக்கம் கோரப்பட்டது- விளக்கம் பெறப்பட்டது - இறுதி ஆணையாக தண்டனை வழங்கப்பட்டது - தண்டனையை எதிர்த்து தனியர் மேல்முறையீடு செய்தது - மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.

பெருநகர சென்னை மாநகராட்சி, தெற்கு வட்டார அலுவலகம், மண்டலம்-14, கோட்டம்-185 வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களால் கடந்த 29.10.2018 அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது, அக்கோட்டத்திற்குட்பட்ட பாலவாக்கம் குப்பம் டெங்கு பாதிப்பு ஏற்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் கொசுப்புழு இருப்பதும், கொசுப்புழு உற்பத்தியாக கூடிய தேவையற்ற பொருட்களை அகற்றாமல் இருப்பது கண்டறியப்பட்டது. திரு. மலைராஜா சுகாதார ஆய்வாளர், கோட்டம்-185 என்பவர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4 ஆம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983 ஆம் ஆண்டு துணைவிதி 9(1) இன் கீழ் பின்வரும் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி பார்வை -1ல் கண்டுள்ளவாறு விளக்கம் கோரப்பட்டது. தனியர் குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக்கொண்டு தனது விளக்கத்தினை 27.11.2018 அன்று சமர்ப்பித்துள்ளார். தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு கீழ்கண்டவாறு தனது விளக்கத்தினை அளித்துள்ளார்.

தான் கோட்டம்-185 மற்றும் 186 ஆகிய கோட்ட சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். தான் தினந்தோறும் காலை முதல் குடிநீரின் குளோரின் அளவு பரிசோதித்தல், அம்மா உணவகம் உணவு தரம், சுவை, தூய்மை பணி மேற்பார்வையிடுதல், கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களின் பணிகள் ஒதுக்கீடு செய்தல் மழைநீர், வடிகால், பக்கவாட்டு வடிகால் சுத்தம் செய்து மருந்து தெளிக்கும் பணி ஒதுக்குதல், கொசுப்புழு ஒழிப்பு பணி குறுக்கு ஆய்வு செய்தல், மலேரியா, மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல், மற்றும் காய்ச்சல் பாதிக்கபட்டவரின் விவரங்கள் சேகரித்தல் மற்றும் ரேபிஸ் தடுப்பு பணிகள் போன்றவற்றை சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகிறேன். மேலும் பொது மக்களிடமிருந்து மற்றும் இணையத்தின் வாயிலாக பெறப்படும் PGR புகார்களுக்கு உடனடியாக புகார்தாரரை சந்தித்து, புகார் குறித்து நல்லமுறையில் நடவடிக்கை எடுத்து பணியை சிறந்த முறையில் செய்து வருகிறேன். மேலும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளை பதிவு செய்து பொதுமக்களுக்கு எந்தவித இடையூறு இல்லாமல் பிறப்பு/இறப்பு சான்றிதழ்கள் பதிவேற்றம் பணிகளை சிறப்பாக செய்து வருவதாக விளக்கம் அளித்துள்ளார்.

குற்றச்சாட்டு எண். 1

திரு. மலைராஜா சுகாதார ஆய்வாளர் கோட்டம்-185எனும் நீங்கள், பாலவாக்கம் குப்பத்தில் டெங்கு பாதிப்பு ஏற்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் கொசுப்புழு இருப்பதும், கொசுப்புழு உற்பத்தியாக கூடிய தேவையற்ற பொருட்களை இருப்பதை கண்காணித்து அதனை அகற்றாமல் இருந்துள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.1க்கு தனியரின் விளக்கம்:

பாலவாக்கம் குப்பம் பகுதி திங்கட்கிழமை அட்டவணையின்படி பணி ஒதுக்கீடு செய்து கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொசுப்புழு ஒழிப்பு பணியாளருடன் வீடு, வீடாக சென்று பொதுமக்களுக்கு கொசுப்புழு உருவாக்கம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி அப்பகுதியில் உள்ள வீடுகளில் தொடர்ச்சியாக கொசுப்புழு அழித்தும், கொசுப்புழு உற்பத்தியாகக் கூடிய தேவையற்ற பொருட்களை உடனடியாக அகற்றியும் சிறப்பான முறையில் செய்து வருவதாக தனியர் விளக்கம் அளித்துள்ளார்.

குற்றச்சாட்டு எண்.2

பெருநகர சென்னை மாநகராட்சியால் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பாலவாக்கம் குப்பத்தில் உள்ள வீடுகளில் கொசுப்புழு உற்பத்தியாவதற்கு ஏதுவான தேவையற்ற பொருட்களை அகற்றாமல் இருந்துள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.2க்கு தனியரின் விளக்கம்:

பெருநகர சென்னை மாநகராட்சியால் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பாலவாக்கம் குப்பத்தில் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுடன் சென்று டெங்கு துண்டு பிரசுரம் விழிப்புணர்வு பதாகை மற்றும் விழிப்புணர்வு அழைப்பிதழ் பொதுமக்களுக்கு வழங்கி கொசுப்புழு உருவாகா வண்ணம் தேவையற்ற பொருட்களை தொடர்ச்சியாக வீடு வீடாக சென்று அப்புறப்படுத்தி வருவதாக தனியர் விளக்கம் அளித்துள்ளார்.

குற்றச்சாட்டு எண் .3

டெங்கு நோய் பரவுகின்ற இச்சூழ்நிலையில், பாலவாக்கம் குப்பத்தில் உள்ள வீடுகளில் கொசுப்புழு உற்பத்தியாக கூடிய தேவையற்ற பொருட்களை அகற்றாமல் இருந்துள்ளதால், சுகாதார சீர்கேடு ஏற்படவும், பொதுமக்கள் மத்தியில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படவும் காரணமாக இருந்துள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.3க்கு தனியரின் விளக்கம்:

பாலவாக்கம் குப்பம் பகுதியில் பொதுமக்களுக்கு கொசு மற்றும் கொசுப்புழு பெருக்கம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியும், தன்சுத்தம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு வழங்கியும் அப்பகுதியில் பொதுமக்களின் துணை கொண்டு கொசுப்புழு உற்பத்தியாக கூடிய தேவையற்ற பொருட்களை உடனுக்குடன் அப்புறப்படுத்தி, பிளிச்சிங் பவுடர் தூவப்பட்டு, கிருமிநாசினி மருந்து தெளிக்கப்பட்டு நோய் ஏற்படாவண்ணம் பணிகளை மேற்கொண்டு வருவதாக தனியர் விளக்கம் அளித்துள்ளார்.

குற்றச்சாட்டு எண் . 4

மேற்கண்ட செயலின் மூலம், நீங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை விதி 20 ஐ மீறியுள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.4க்கு தனியரின் விளக்கம்:

பாலவாக்கம் பகுதியில் தொற்று நோய் ஏற்படா வண்ணம் என் பணியை முழு அர்பணிப்புடன் செய்வதோடு, பொதுமக்களுக்கு சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தியும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நற்பெயர் பெற்று தருதோடு, பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை மீறாமல் பொறுப்புணர்ச்சியோடு என் பணியை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றேன். எனவே, என்னுடைய பணிவான விளக்கத்தினை ஏற்று தன்னை இக்குறிப்பாணையிலிருந்து விடுவிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் பணிந்து கேட்டுக் கொள்வதாக விளக்கம் அளித்துள்ளார்.

இந்நேர்வு தொடர்பாக திரு. மலைராஜா சுகாதார ஆய்வாளர் கோட்டம்-185 மண்டலம்-14 என்பவர் மீது சுமத்தப்பட்டுள்ள துணை 9(1)இன் கீழ் குற்றச்சாட்டிற்கு தனியர் அளித்துள்ள விளக்கம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தனியர் அளித்துள்ள விளக்கம் ஏற்புடையதாகயில்லை என்பதால், தனியருக்கு தண்டனையாக **"""" ஆறு மாதம் திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம்""** செய்து ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட தண்டனை ஆணையை பெற்றுக்கொண்ட தனியர், , தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களிடம் 04.04.2019 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். தனியர் சமர்ப்பித்துள்ள மேல்முறையீட்டு மனுவில் தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தான் கோட்டம் - 185 மற்றும் 186-ல் மிக நல்ல முறையில் பணிபுரிந்து வந்தேன். தன்னுடைய அன்றாட பணியின் விவரங்களை அனைத்தும் குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு விளக்கமாக தெரிவித்துள்ளேன். மேற்படி தன்னுடைய விளக்கத்தினை ஆய்வு செய்தாலே தான் எவ்வாறு பணிபுரிந்து வருகிறேன் என்பது தெரியவரும். தன்னுடைய விளக்கம் ஏற்புடையதல்ல எனக்கூறி 16.02.2019 நாளிட்ட வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் செயல்முறை ஆணை பெறப்பட்டது. தனக்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்து குற்றசாட்டுக்கு கீழ்கண்டவாறு எனது மேல்முறையீடு மனு பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

குற்றச்சாட்டு 1ற்கான தனியரின் மேல்முறையீட்டு விளக்கம்:

நான் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 14, கோட்டம் - 185 மற்றும் கூடுதல் பொறுப்பாக கோட்டம் - 186-ல் சுகாதார ஆய்வாளராக தற்போது பணிபுரிந்து வருகிறேன். பாலவாக்கம் குப்பம் பகுதி திங்கட்கிழமை அட்டவணையின்படி பணி ஒதுக்கீடு செய்து கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தினமும் காலை 7 மணிக்கு அலுவலகம் வந்து பணியாளர்கள் வருகையை பதிவு செய்து நாள் தோறும் செக்டார் பணியாளர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்து, புகை பரப்பும் பணி மற்றும் கிருமி நாசினி தெளிக்கும் பணி ஆகியவை பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்து, அன்றைய தினம் செய்ய வேண்டிய பணிகள் குறித்து அறிவுரை வழங்கி பணிக்கு அவர்களை அனுப்பிவைப்பேன். அவர்கள் உடனே ஒதுக்கப்பட்ட பகுதியில் களபணி மேற்கொள்வார்கள். கோட்டம் 185-ல் உள்ள 10 செக்டாரில் தற்காலிக பணியாளர்கள் பணியில் உள்ளனர். தினமும் 80 வீடுகள் வீதம் கொசுப்புழு தடுப்புபணி செய்வதற்கு தொழிலாளிக்கு காலை 7 மணி முதல் 2 மணி வரை ஒதுக்கப்பட்டு அதன்படி மலேரியா பணியாளர்கள் பணி செய்து வந்தார்கள். பணியாளர்கள் பணி நேரம் முடியும் வரை அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 80 வீடுகளில் அடிப்படை சுகாதாரப் பணியாளர், சுகாதார ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோரின் மேற்பார்வையில் இப்பணி மேற்கொள்ளப்படும். அவ்வப்போது இப்பணி குறித்து உயர் அதிகாரிகளால் குறுக்காய்வு செய்யப்படும். பின்னர் நடந்த கலந்தாய்வு கூட்டங்களில் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் 11 மணிக்கு மேல் செக்டார் பணியாளர்களை கொண்டு ஒரு குறிப்பிட்ட காய்ச்சல் வந்த பகுதி அல்லது செக்டார் பணிக்கு வராத பகுதியில் குழுவாக சென்று Mass Source Reduction தேவையில்லாத பிளாஸ்டிக் மற்றும் கொசு உற்பத்தியாகும் பொருட்களை அகற்றும் பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில், தினமும் காலை 11 மணிக்கு மேல் Mass Source Reduction பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பணி வெவ்வேறு பகுதியில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டதால், காலை 7 மணி முதல் மதியம் 11 மணி வரை 4 மணி நேரத்தில் 80 வீடுகளில் கொசுப்புழு தடுப்புப்பணி (ALO) முழுமையாக மேற்கொள்வதில் சற்று சிரமம் ஏற்ப்பட்டது. ஆனால் ஒரு குறிப்பிட்ட காய்ச்சல் வந்த பகுதி அல்லது செக்டார் பணிக்கு வராத பகுதியில் (HOTSPOT) தடுப்புப்பணி மேற்கொள்ள பணியாளர்கள் குழுவாக சென்று 11 மணிக்கு மேல் பணி மேற்கொள்ளும் போது ஒவ்வொரு பணியாளரும் அவர்களுக்கு அன்றைய தினம் ஒதுக்கப்பட்ட 80 வீடுகளில் கொசுப்புழு தடுப்புப்பணி (ALO) பணி மேற்கொள்ளப்படும். மேற்கண்ட பகுதியில் பொது மக்களிடம் கையொப்பம் பெறப்பட்டு அவர்களுக்கு சுகாதார நலக்கல்வி போதிப்பார்கள். களப்பணி மேற்கொண்டு கையொப்பம் பெற்ற நகல்களை தங்களின் மேலான பார்வைக்கு இணைத்துள்ளேன். கோட்டம் - 185 சார்ந்த 10 செக்டார் பணியாளர் மற்றும் Side Drain பார்க்கும் 3 பணியாளர்கள் கொண்டு Mass Source Reduction கொசுப்புழு தடுப்பு பணி (ALO) காலை 7 மணி முதல் மதியம் 2 மணி வரை 8 மணி நேரம் மேற்கொள்ளப்படுகிறது. கொசுப்புழு தடுப்புப்பணியில் ஒவ்வொரு நபரும் 80 வீடுகள் பார்க்கப்பட்டு வருகிறது. Mass Source Reduction பணிக்கு மழைநீர் கால்வாய் சுத்தம் செய்யும் பணியாளர்களுக்கு தினமும் 11 மணிக்கு மேல் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டு தேவையற்ற பொருட்கள் (Mass Source Reduction) அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்கள் சனிக்கிழமை 29.10.18 அன்று குறுக்காய்வு செய்து சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் உடனே நிவர்த்தி செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட பாலவாக்கம் குப்பம் பகுதியில் ஒவ்வொரு திங்கள் கிழமையும் ALO, Source Reduction, Fogging பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் நகல் இத்துடன் தங்களின் மேலான பார்வைக்கு இணைத்துள்ளேன். எனவே, தயவு செய்து என்னை இந்த குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்க வேண்டி பணியுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குற்றச்சாட்டு 2ற்கான தனியரின் மேல்முறையீட்டு விளக்கம்:

ஒவ்வொரு நாளும் செக்டார் பணியாளர்களை பணிக்கு அனுப்பும் போது கையில் காய்ச்சல் பதிவேடு ஒன்று கொடுக்கப்பட்டு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தெருக்களில் வீடுகள் தோறும் காய்ச்சல் குறித்த விபரங்கள் சேகரிக்கப்படுகிறது. மேலும், கோட்டம் 185-ல் உள்ள மருத்துவமனைகளுக்கு தனியாக ஒரு பணியாளரை நியமித்து தினந்தோறும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வந்தது. அவ்வாறு சேகரிக்கப்படும் விபரங்களின் அடிப்படையில் அப்பகுதியில் மறுநாள் புகைப்பரப்புதல், கைத்தெளிப்பான் மூலம் ஸ்ப்ரே செய்தல் ஆகிய கொசு ஒழிப்புப்பணி மற்றும் தேவையற்ற பொருட்களை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு நலக்கல்வி அளிக்கப்படும். மேலும், ஒவ்வொரு நாளும் செக்டார் பணியாளரிடம் இருந்து மதியம் 2 மணியளவில் அன்றைய தினத்தின் பணியின் அறிக்கை பெறப்பட்டு H.I B.I மற்றும் C.I குறியீடு அதிகம் உள்ள பகுதிகள் கண்டறியப்பட்டு மறுநாள் அப்பகுதியில் புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் 50 வீடுகளுக்கு மிகாமல் புகைப்பரப்பும் பணி மேற்க்கொள்ளப்பட்டு கையொப்பம் பெறப்பட்டது. தொடர்ச்சியாக கொசுப்புழு உருவாகா வண்ணம் தேவையற்ற பொருட்களை வீடு வீடாக சென்று அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. அதன் நகல் இத்துடன் தங்களின் மேலான பார்வைக்கு இணைத்துள்ளேன். எனவே, தயவு செய்து என்னை இந்த குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

குற்றச்சாட்டு 3ற்கான தனியரின் மேல்முறையீட்டு விளக்கம்:

பொது மக்களுக்கு டெங்கு நோய் குறித்து விழிப்புணர்வு வாரம் தோறும் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதியில் உள்ள பள்ளி மாணவ, மாணவியருக்கு டெங்கு குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக துண்டு பிரசுரம் வழங்கி செய்முறை விளக்கம் செய்து காட்டி நலக்கல்வி வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் அவ்விடம் தினமும் சுத்தம் செய்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அப்பகுதியில் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டு சுகாதார நலக்கல்வி பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், பகுதியில் பொது மக்களுக்கு கொசு மற்றும் கொசுப்புழு பெருக்கம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியும், தன்சுத்தம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு வழங்கியும் அப்பகுதியில் பொது மக்களின் துணை கொண்டு கொசுப்புழு உற்பத்தியாக கூடிய தேவையற்ற பொருட்களை உடனுக்குடன் அப்புறப்படுத்தி, பிளிச்சிங் பவுடர் தூவப்பட்டு, கிருமிநாசினி மருந்து தெளிக்கப்பட்டு நோய் ஏற்படாவண்ணம் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. அதன் நகல் இத்துடன் தங்களின் மேலான பார்வைக்கு இணைத்துள்ளேன். எனவே, தயவு செய்து என்னை இந்த குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

குற்றச்சாட்டு 4ற்கான தனியரின் மேல்முறையீட்டு விளக்கம்:

